Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

பூர்வ காண்டம்



ACC. NO.
46366

"தமிழ் வேத நாவலர்"
"வைத்தியமணி"
சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை
முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை

Koviloor Digital Library

Koviloor Digital Library 5/1

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

(பூர்வ காண்டம்)
ஒன்பது வகை உரைவிளக்கம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46366

இந்நூலாசிரியர்
"வைத்தியமணி"
"தமிழ் வேத நாவலர்"
முத்தமிழ் வேதத் திருச்சபை
சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை.

இஃது
கனடா டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள்
ஆர்வத்தினுலும் பேரன்பினுலும்

கோயம்புத்தூர்
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நூல் பெயர் : இராமாயண இலக்கியம் (பூர்வ காண்டம்)
ஒன்பது வகை உரைவிளக்கம்

முதற்பதிப்பு : துன்முகி ஆண்டு (2017)

நூலாசிரியர் : சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர்
தேவகோட்டை

பக்கங்கள் : 68 பக்கங்கள்

வெளியீடு : முத்தமிழ் வேதத் திருச்சபையோர்
தேவகோட்டை

தாள் : 21.1 பேப்பர்

நூலின் அளவு : கிரவுன் 1/8 சைஸ்

விலை : ரூ. 51 (ருமக)

எழுத்து : 13.5 புள்ளி

உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர்
தேவகோட்டை

கிடைக்குமிடம் : **இராம. ஆதிரெத்தினம்**
இணைச்செயலாளர். முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு. தேவகோட்டை.
போன் : 91+4561+270113

நலந்தா புத்தகக் கடை
செக்காலை ரோடு, காரைக்குடி - 630 001.
போன் : 91+9361410349

கணினி &
அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
கோயம்புத்தூர்-641 012.
போன் : 91+9361410269
email : sribalajigraphics.cbe@gmail.com

Koviloor Digital Library

5/1



இந்நூலாசிரியர்
"வைத்தியமணி"
"தமிழ் வேத நாவலர்"
முத்தமிழ் வேதத் திருச்சபை

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

முன்னுரை

எம் ஞானத் தெளிவு குரு திருவடி உச்சிமேற் கொண்டு "இராமாயண இலக்கியம்" (பூர்வ காண்டம்) உரைநடை நூலிற்கு முன்னுரை எழுதுவோமாக.

கலியின் கொடுமை தீரவும், நாத்திகம் வேரறச் செய்யவும், ஆத்திகம் அறிவு பூர்வமாக ஓர்ந்து தெளிந்து உணரச் செய்யவும், நம் பரம்பரை ஞானம் பெற்று இகபரசுகம் அடையவும் தேவகோட்டையில் அம்மையப்பனின் திருஅருள்பெற்ற சித. வேலாயுதம்பிள்ளை சாத்தாயி அம்மை இருவருக்கும் எம்ஞானத் தெளிவுகுரு ஷண்முக நாதபிள்ளை இப்பூமியல் இராட்சச ஆண்டு ஆவணித் திங்கள் (உய) ஆம் நாள் (20) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்று அவர்களின் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது. திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரமாகிய எழுதாக்கிளவிக்கு "திருமுறைப்பெருநூல் விளக்க நான்மறை" இயற்ற வந்த உயர்மேதை. சாதக அமைப்பு மீன லக்கினம் மீனத்தில் குருவும், மிதுனத்தில் செவ்வாயும் சனியும், கடகத்தில் சந்திரனும் கேதுவும், சிம்மத்தில் சூரியனும் சுக்கிரனும், கன்னியில் புதன், துலாத்தில் மாந்தி, மகரத்தில் ராகு, குரு, சந்திரன், சூரியன் ஆகிய மூவரும் ஆட்சி பெற்றவர்கள். புதன் ஆட்சியொடு உச்சமும் பெற்றவர். இத்தகைய சீரிய அமைப்பில் கோள்கள்

Koviloor Digital Library 5/1

நின்ற தன்மையால் உலகிற்கு சிவமணம் நுகர் நூல்கள் ஆக்கித் தர வந்த உயர்மேதை என்பதை உணரலாம்.

1977ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் உத்திராட நட்சத்திரத்தில் "முத்தமிழ் வேதத்திருச்சபை" முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் தோற்றுவித்தார்கள். திருஞான சம்பந்தர் செய்தருளிய எழுதாக்கிளவியாகிய தேவாரத்திற்கு (திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை) விளக்கம், திருமந்திரத்தில் சூனிய சம்பாதனை விளக்கம், கரண இலக்கண விளக்கம், பண்ணிலக்கணச் சூக்கம் விளக்கம், இலக்கிய இராமாயணவிளக்கம் , முத்திநெறி இலக்கண விளக்கம் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 7 மணிமுதல் 9 மணிவரை நடத்தி ஆண்டு நிறைவில் ஆண்டு விழா நடத்தி வந்தார்கள். 1989ஆம் ஆண்டு தை மாதம் 15ஆம் தேதி சமாதி நிலை எய்தினார்கள். அவர்கள் ஆக்கித் தந்த நூல்களில் பனிரெண்டு நூல்கள் ஆண்டுக்கு ஒரு நூல் வீதம் சிவபுண்ணிய சீல மெய்யன்பர் சிவனடியார் சிதம்பரம் செட்டியார் அவர்களின் தவப்புதல்வர் சிரஞ்சீவி கனடா டாக்டர் சித. ஏகப்பன் அவர்களுக்கு இறையருளும் குருஅருளும் கூட்டுவிக்க அதன் பயனாக உலக மக்களுக்கு வாசிக்கக் கிடைத்திருக்கிறது.

ஞானத் தெளிவுகுருவின் நல்ஆசியாலும், அம்மையப்பனின் நல்ஆசியாலும் பூர்வ ஜென்மத்துப் புண்ணியம் கைவரப் பெற்ற சிரஞ்சீவி திருமதி. டாக்டர் முத்துலெட்சுமி ஏகப்பன் அன்பு மனம் கனிந்து அதன் விளைவாக முத்தமிழ் வேதத் திருச்சபைக்கு முத்தாத்தாள் கோயிலை ஒட்டியே கட்டிடம் அமைத்து தந்துள்ளார்கள்.

Koviloor Digital Library

அவர்கள் பரம்பரை கலியின் கொடுமையை வென்று மலைபோல வளர்ந்து நாளும் நாளும் உயர்வதோர் நன்மையைப் பெறுவார்கள் என்பது உறுதி. "இராமாயண இலக்கியம்" பூர்வ காண்டம் உரைநடை நூல் முத்தமிழ் வேதத் திருச்சபைக் கட்டிடத் திறப்பு விழா அன்று வெளியிடப்படுகிறது. சித்தர்கள், முனிவர்கள், இருடிகள், ஞானியர்கள், சிவயோகத்தில் நிலைத்து "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆகமத்தின்படி சிவரகசியத்தை சூட்சுமமாக இயற்றியுள்ளார்கள். அந்த சிவரகசியத்தை உலக மக்கள் அறிந்து அறிந்தபடி உணர்ந்து வாழ எம் ஞானத் தெளிவுகுரு "இராமாயண இலக்கியம்" இயற்றியுள்ளார்கள். அதன்படி,

துரியாதீதம்	-	தசரதன்
பிண்டநாடி 60 ஆயிரம்	-	தசரதர் மனைவியர்
மூளை	-	வசிட்டர்
இரைப்பை	-	விசுவாமித்திரர்
சமானவாயு	-	அகத்தியர்
மலாசயம்	-	துருவாச முனிவர்
சலாசயம்	-	கோதம ரிசி
அநாகதம்	-	கோசலை
விசுத்தி	-	கைகயை
அக்கஇணையம்	-	சுமித்திரை
மனம்	-	ராமன்
புத்தி	-	லக்குவணன்
சித்தம்	-	சத்துருகினன்
அகங்காரம்	-	பரதன்

Koviloor Digital Library

இராமாயண இலக்கியத்தில் தோன்றுவது யோகாந்த சிவரகசியம் என்றுணர்க. உடலும் உயிரும் கூடி வாசிக்க வாசிக்க சிவரகசியத்தை உணர்ந்து மேக்கதி பெற்று நரை, திரை, நோய், மூப்பு, சாக்காடாகிய உயிர் குற்றங்கள் நீங்கி சிவபுண்ணியசீல மெய்யன்பர்கள் சிவனடியார் பதம் பெற்று நீடூழி வாழ்வார்கள்.

இந்நூலிற்கு முன்னுரை எழுத எம் ஞானத் தெளிவு குருவின் நல் ஆசியாலும் தேவகோட்டை கைலாசநாத விநாயகர் விஸ்வநாதர் விசாலாட்சி சற்குருநாதர் அருளாலும் கூட்டுவித்ததை எண்ணி எண்ணி மகிழ்கிறோம். வரும் பிறவி தோறும் முத்தமிழ் வேதத் திருச்சபை ஞானத் தெளிவுகுருவின் அடிமையாகவே வாழ இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர ஆரம்பம் முதல் நிறைவு வரை உறுதுணை புரிந்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் உயர்திரு முருக பக்தர் புஷ்ப. சுவாமிநாதன் அவர்கள் குடும்பத்தாருக்கு எங்கள் முத்தமிழ் வேதத் திருச்சபையாரின் மனமார்ந்த அன்பு கலந்த நன்றியை உளமாரத் தெரிவித்துக் கொள்கிறோம். சகல நலமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்
அடியார்க்கு அடியேன்
இராம. ஆதிரெத்தினம்
இணைச் செயலாளர்
முத்தமிழ் வேதத் திருச்சபை

Koviloor Digital Library



Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிலும் நன்றாக குரு வாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

பூர்வ காண்டம்

உலகினருக்கு வேண்டிய அரும்பொருளை யுணர்த்துவதற்கு எடுத்துக் காட்டி விளக்கும் உதாரணத்தின் இலக்கியத்திற்கு "இதிகாசம்" என்று பெயர். அவ்வகையான இதிகாசம் இராமாயணம் பாரதம் என இரண்டாகும். இவ்விரண்டின் உட்பொருளாகச் சிவரகசியம் விளங்கிக் காணும் சிவம் சீவனுகிய மலரினுண் மணமாகத் திகழ்வது "சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" என்பது ஆகமம். சீவனுக்குள்ளே சிவமணத்தை நுகர்ந்து சீவனெனச் சிவனென்ன வேறில்லாமல் சீவனே சிவமாவிட்டிருந்து பெரியோர்களில் ஒருவரான வான்மீகி யென்னும் பெயரையுடைய மாமுனிவர் தாம்பெற்ற பேறு இத்தரணி-யெல்லாம் பெறட்டும் என்று எண்ணி எதிர்காலத்தில் அகில உலக மக்களின் உள்ளத்திலும் அகலாமல் இடம்பெற் றிருக்கும் இராம இராவண யுத்த நிகழ்ச்சிக்குச் சரியாக இயையும் சரியையாகத் தாம் கண்ட சிவரகசியத்தை இராமாயண காவியமாக உரைத்தருளினர். அந்தச் சிவரகசியம் யாது ? இராம இராவணுதிகள் போர் நிகழ்ச்சி யாது? அதற்குச் சரியாக இயைந்த சரியை யாது? என்பவற்றை "இராமாயண இலக்கியம்" என்னும் இந்நூல் விளக்குகிறது.

Koviloor Digital Library

ஞானசிரியனது திருநோக்கம் பெற்றமையால் நல்லுணர்வு தோன்றப் பெற்ற வனவேடன் தனது தீச் செயலுக்காக மனம் நொந்து வருந்திய காலையில் அவனை புனிதனுக்கும் பொருட்டு அவனால் சொல்லற் கெளியதும் மறக்காவியற்கை யுடையதுமான "மராமரத்தைச் சுட்டிக் காட்டி அதன் பெயரைச் சொல்லிக் கொண்டேயிரு" என ஞானசிரியன் உபதேசித்துச் செல்ல; அவ்வாறே சொல்லச் சொல்ல மரா ராம வென்றாகிச் சமாதி நிட்டையைத் தரவும் அந்த நிலையில் காலம் பலசெல்லலால் உடம்பை மறைத்துப் புற்று மூடிப் போகலானதன் பின் ஒருகால் முன்னியைவு தோன்றப்பெற்றுத் தன்னுடம்பின் மீது, வலிதின் மிகுந்து மூடிக் கொண்டிருந்த வன்மீகமாம் புற்றிலிருந்து எழுந்துவெளியில் நோக்கிய வான்மீக முனிவன் நோக்கில், ஒருவேடன் அன்றிற் பறவை மீது அம்பு தொடுத்துக் கொல்வது தோன்ற அதனால். மனம் தாளாமல் கோபித்துவைத வசைமொழித் தொடரே இராமாயணம் ஆயிற்று என்னும் துராலிங்க உரையில்,

யான் ஒரு வன வேடன் : கொடுஞ்செயலுள்ளவன் : ஞானசிரியனுடைய திருவருநோக்கால் நல்லுணர்வு தோன்றப் பெற்றவன், கல்வியறிவு இல்லாதவனாகையால் மராமரத்தையே "ராம" மந்திரத்திற்கிலக்கியமாகக் கொண்டு, ஓதி மரமென உணர்வற்றுப் புற்றுமூட நின்றவன் மூடங்கெட்டு வெளியில் நோக்கிய போது, எனது நோக்கம் அன்றிற் பறவையை அம்புவிடுத்துக் கொல்லும் வனச்சரன்

Koviloor Digital Library

மீது பட, அவனைக் கோபித்துப் பேசியவசை மொழியே தான் இராமாயண மாயிற்றேயொழிய நான் ஒன்றும் இசைப்பனுவல் செய்யவல்ல னல்லேன் என்று கூறும் அவையடக்கமாக அவினயனுர் உரையும். இவற்றின் நற்றத்த வுரையாகப் "பரிசன வேதி பரிசித்த வெல்லாம் வரிசை தரும் பொன் வகையாகு மாப்போற் குருபரிசித்த குவலய மெல்லாம் திரிமலந் தீர்ந்து சிவனவனுமே" என்றபடி ஞானசிரியன் திருவருணோக்கம் பெற்ற நலத்தால் வழியிற் பறித்தல், உயிர்க்கொலை செய்யல், வனத்தின் மறைந்துறைதல் என்னும் வனவேடன் செயல் மெய்நோக்கில் முறையே, உயிர்க்கலையாம் வாசி நடக்கும் வழியிற் சென்ற அளவின் மீளாமற் கழியல், அதனுல் உயிருக்கு ஊறுபாடு நேர்தல், மும்மலத்தால் மறைக்கப்படல் என்பனவே யென்றும் இச்செயற்பாடுள்ளோர் யாரேயாயினும் "அவமிக்க அவரே அதி கொலை வேடர்" என்றும், ஞானசிரியன் திருவருணோக்கம் பெற்ற நலத்தாற் றெளிந்து உய்வுபெற வேண்டி வருந்திய காலையில் இயற்கையில் மகர வுருவத்தையுடைய வாசியானது ரா - வாக இருத்தலால் மராவெனப்படும் மெய்மொழியை யுணர்த்த அதை யவ்வாறே இசைக்க விசைக்க உபதசமாய் (பன்னிரண்டாம்) நின்ற அந்தக் குருவுப தசமாம் வாசியானது மகரம் ரகரமாய்த் திரிந்து கெட்டு ரகரம் மகரம் ஆதலாகி ராமவாகி சமமாய் நின்ற ஆதியுடன் ஒன்றுவிக்கும் சமாதியைத் தரா நிற்க, அதனுற் காலம் பல கூடவும் உடம்பை மறைத்துப் புற்று வளர்ந்து மூடவும் நின்ற நிலையில்

Koviloor Digital Library

முன்னியைபு வுடையவராய் உண்ணோக்கம் நீங்கி வன்மை யகமாய் மறைத்த புற்றை விட்டு வெளியில் வந்துலவிய காரணத்தால் வான்மீக முனிவரெனப் பெற்றவராய் உலகிற்கு தாம்பெற்ற பேற்றையடையும் வழியை யறிவுறுத்தற் பொருட்டு. "சேவலன்றிஇல் பேடு" "பேடு அன்றி இல்சேவ" லென்னும் இயற்கைத் தன்மையால் அன்றில் எனப்படும் தன்மை வாய்ந்ததான உயிர்கலையாம் வாசியானது நாடோறும் மாய்ந் தழியும் செயல்புரியும் நாத்திகத்தை இகழ்ந்து மெய்ஞான விளைவைத் தரும் யோக சாதனத்தை உருவகப் படுத்தி ரா என்னும் வாசி மா அயணமாம் வகையைச் சொல்லத் தோன்றியதே இராமாயணம் ஆம் என்னும் மெய்ஞானனுபூதி விளைவுச் சாதன யோகாந்தச் சரியையிற் சிவரகசியம் தோன்றுவன காண்க. இதை விவரிக்கும் இராமாயண இலக்கியச் செய்யுள்

அருட்குரு நாத னெதிராங் கிராத னறிவுபெற்று
வருந்த மகார வடிவான வாசிராவாம்பதமா
யிருக்கு மறைசொல வவ்வா றிசைக்க விசைக்கவுமக்
குருமொழி ராம வெனவாய்ச் சமாதியிற் கூடிடவே.

கூடின காலங்கள் மேனிமறையக் குவிந்து புற்று
மூடின வுண்ணின் றெழுந்தவான் மீக முனிவெளியிற்
நாடின போதன் றிலாம் வாசி கோறல்செய் நாத்திகனைத்
தூடினஞ் செய்யரா வாம்கா லின்மாயணந் தோன்றியதே.

Koviloor Digital Library

இவ்வாறு தோன்றிய வான்மீக ராமாயணம் என்னும் பெயரையுடைய ஆதிநூல் காலப் போக்கில் சிதைவுற அதைத் தேமதுரத் தமிழாற் செப்பம் செய்தளித்தான் கம்ப நாடுடைக் கவிஞர் பெருமகன் முனிவர் உரைத்ததை வேள்வியில் உயிர் செகுத்துண்ணும் வருக்கத்தார் திரிபுறும்படி செய்தார்கள். உலகில் இதன்மேம்பாடு அறியாமற் கற்பனைக் கதையென்றனர் பலரும். மேலும் எதிர்மாருன தருக்கமுஞ் செய்யத் தலைப்பட்டு விட்டனர். இவைகளையெல்லாம் அறிந்து அந்நூலிற் கேற்பட்ட மாசினைப் போக்க எண்ணி நாம் விரும்பி உரைசெய்யத் தக்கதாய் எந்தப்பிழையு மில்லாத தாம் கந்தபுராணம் இருக்கும்போது அகில உலகமும் உணர்ந்துள்ள வளமிகுந்த இராமாயணத்தின் இலக்கியத்தை ஆக்கினேம். இவ்வாறு ஆக்கியுள்ள ஷண்முக நாதன் என்னும் பிள்ளைப் பெயரையுடைய எமது நூலை முறையே அறிந்தவர்கள் உயர்கதியும், அதனால்நரை திரை நோய் மூப்பு சாக்காடாகிய வுயிர்க்குற்றங்களும் நீங்கப் பெற்ற பாக்கிய வான்களாய் மெய்ஞான வுணர்ச்சி யுடைய வராய்ப் பந்த நீக்கமும் மாறுபாடில்லாத நிலைபேறும் எய்தி சித்தர் பதம்பெற்றுயர்வார்கள் என்பனவற்றை யுணர்த்தும் இராமாயண இலக்கியச் செய்யுள்.

தோன்றிய வான்மீக ராமா யணப்பேர் சுருதியதைத்
தேன்றமி ழாற்கம் பநாடனீந் தான்முனி செப்புமுயர்
நூன்முறை வெற்றறி வோராற் சிதைந்தது நுண்மையொடு
மேன்மை யறியாது பொய்யென்று வீணர் விளம்பினரே.

Koviloor Digital Library

விளம்பினர் பல்வகை மாறுபடு தர்க்க மீதறிந்தக்
களங்கற வெந்தப் பிழையுங் மிலாததாங் கந்தமெனுந்
தளமெட்டா தாரப் புராண மிருக்கச் சகமறியும்
வளமிக்க ராமா யணத்தின் னிலக்கிய மாக்கினமே.

ஆக்கினேன் ஷண்முக நாதனென் நூலை யறிந்தவர்கள்
மேக்கதி பெற்றுநரை திரைநோய் மூப்பும் வீதலற்றுப்
பாக்கிய வான்களாய் சத்தியஞான பரமுணர்ந்து
மோக்கமா மீறிலா வீடெய்தி சித்தாக வோங்குவரே.

Koviloor Digital Library

உ

சிவமயம்

தோற்றப்படலம்
நாத்திக வேதை தீர்சருக்கம்

தசரதச் சக்கரவர்த்தி அறுபதினுயிரம் மனைவியர்களை யுடையராய் அறுபதினுயிரம் ஆண்டுகள் அயோத்திமா நகரத்திலிருந்து ஆட்சிசெலுத்தி வந்தார். அறுபதினுயிரம் ஆண்டுக் காலங்களாகியும் மனைவியர்கள் அறுபதினுயிரம் பேர்கள் இருந்தும் அவர்களில் யாருக்குமே புத்திரப் பேறுவாய்க்காமற் காலமும் வாழ்வும் வறிதாயின. தசரதச் சக்கரவர்த்தி தனது குலகுரு வாகிய வசிட்டமுனிவரிடம் இக்குறைப் பாட்டினீக்கம் பெறவேண்டிய காலையில் உரோம பாதப் பேரரசன் தனது நகரின் மழை வளங் குன்றியதை நீக்கும் பொருட்டு, நல்லன்புப் பணி விடை செய்ய ஆங்கிருப்பவரும் தன்வரவு மழை வரவு ஆம் சிறப்பு வாய்ந்த வரும் ஆன கலைக் கோட்டு மாமுனிவரை அழைத்து வரச் செய்து புத்திரற்கு ஆம் இட்டியொன்று செய்ய, அவ்விட்டியின் கண் எழுந்த தழலிடை யொரு பூதந் தோன்றி பாற்சாதத்தை யிட்டுமறைய அதைத் தசரதன் தன்னுடைய பட்டத்தரசிகளாகிய கோசலை, கைகயை, சுமித்திரை மூவருக்கும் அளிக்க அதனுல் மூவரும் நான்கு புத்திரர்களைப் பெற்றெடுத்தார்கள். அதிற் கோசலை மைந்தன் ராமன், கைகயை மைந்தன் பரதன் சுமித்திரை மைந்தர்கள் இலக்குவன் சத்துருக்கணன் என அழைக்கப் பெற்ருர்கள்.

Koviloor Digital Library

என்பன கம்பராமாயணைத் திருவவதாரப் படலம் முழுவதிலும் காணப்படும், துராலிங்க வுரையாம். இதை இப்படியே அவினயனுருரையாகப் பார்ப்பவர்கள் இது எவ்வாறு பொருந்தும் ஒரு மனிதன் அறுபதினுயிரம் ஆண்டு வாழ்வது, அறுபதினுயிரம் மனைவியர்களுடைய வனுகை இருப்பது. அவ்வளவு பெண்களினும் ஒருத்திக் கூடப் புத்திரப் பேறில்லாமல் போவது, புத்திரர்காம் இட்டியிற் பூதந்தோன்றி அன்னங் கொடுக்க புத்திரப் பேறு ஏற்படுவது, கலைக்கோட்டு முனிவன் வருமிடமெல்லாம் மழைவருவது இவையாவும் நடைமுறைக்கு ஒத்துவருவன வாயில்லை. இவைகளில் எந்தஒரு பகுதியையும் அறிஞர் ஒத்துக் கொள்ள மாட்டார் என்று கழறும் பல் உரைதோன்றுவது நீங்க, தசரதன் பூ மண்டலம் முழுவதையும் ஆட்சி செய்யும் சக்கர வர்த்தி யாக இருந்தான். எங்கெங்கும் அவனது ஆட்சி சென்று நிலைபெற்றிருப்பதற்குக் காரணமாக வானிலும் மண்ணில் எண்டிக்கிலும் நீரிலும் விரைந்து செல்லும் ஊர்திகள் சிறப்புடையன வாகக் கொண்டு விளங்கிய காரணம் பற்றியே தசரதன் என்னும் சிறப்புப் பெயரையும் கொண்டிருந்தான். அவன் அயோத்திமா நகரத்திலிருந்து ஆட்சி செய்தகாலம் எட்டுலட்சத்து அறுபத்து நாலாயிரம் ஆண்டுகளைக் கொண்ட துவாபர யுகத்தில் எட்டுலட்சத்து அறுபதாவது ஆயிரம் ஆண்டாக இருந்தது. அதனல் அறுபதினுயிரம் ஆண்டுகள் இருந்ததாகச் சொல்லப்பட்டது. அறுபதாவது ஆயிரம் ஆண்டில் ஒருபெரும் மாறுதலைத் தரும் மேம்பாடுள்ள

Koviloor Digital Library

நிகழ்ச்சி யொன்று உண்டெனவுலக மக்கள் யாவரும் எதிர்பார்த்து இருந்தமையால் அந்த ஆண்டில் பிறந்தவர்களுக்குங் கூட "அறுபதினாயிரம்" என்ற பெயர்வைத்து அழைக்கப் பெற்றது. அவ்வாறு பெயர் வைத்த பெண்கள் அநேகரை அவன் மனைவியராகக் கொண்டிருந்தமையால் அறுபதினாயிரம் மனைவியர்களை யுடையவனெனப் பட்டான். பட்டத்தரசிகள் மூவருக்கும் மேற்சொல்லப்பட்ட அறுபதினாயிரம் மனைவியர்களுக்கும் புத்திரப்பேறு ஏற்படாமையால் தன்குருவான வசிட்டருடன் யோசித்து, அவருரைப்படி கலைக்கோட்டு முனிவரை யழைத்து வந்து, புத்திரற்காம் இட்டி யொன்று செய்து அதிற்பாகப் படுத்தப் பெற்ற அன்னத்தை மூவருக்கும் கொடுத்தான். அந்த அன்னம் வேள்வித்தீயிற் பாகப்படுத்த பெற்றமையாலும் தீ ஐம்பூதங்களில் ஒன்றுகையாலும் அந்த அன்னம் பூதத்தாற் கொடுக்கப் பெற்றதாகக் கூறப்பட்டது. இந்தச் சாந்தி செய்த புண்ணியத்தாலும் அறுபதாவதாயிர வருடத்தில் ஒருபெரும் மாறுபாடான விளைவைத்தரும் உன்னத நிகழ்ச்சி யொன்றேற்படும். என்று உலக மக்கள் எல்லாம் எதிர்பார்த்த வண்ணம் நடைபெறும் நிமித்தமாகவும் மூவருக்கும் நான்கு குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் முதலாவதாகப் பிறந்த கோசலத் தேசத்தரசன் மகளுடைய பிள்ளைக்கு "அராஉமா" என்னும் இறைவன் இறைவியுடைய திருநாமம் இணைந்த ராம என்றும், இரண்டாவதாகப் பிறந்த கேகய தேசாதிபன்

மகளுடைய பிள்ளைக்கு பரஅதன் (பகைவர்களை நாசஞ்செய்பவன்) என்ற சிறப்புப் பெயராகிய பரதனென்றும், மூன்றுவதாகச் சுமித்திரைப் பெற்ற இரட்டைப் பிள்ளைகளில் எண்ணியதை எண்ணியாங்கு செய்யும் ஆற்றுலுடையான் என்னுஞ் சிறப்புப் பெயராக இலக்குவணன் என்றும், சத்துருக்களுக்களுக்கு வெய்யவன் என்னுஞ் சிறப்புப் பெயராகச் சத்துருக்கினன் என்றும் பெயரிட்டார் களென்று காணப்பெறும், நற்றத்த வுரைக்குச் சரியான இயைபுள்ள சரியையாக், அகார உகார மகாரங் கூடிய ஓங்காரம் போன்று விரிதல், குவிதல், ஒடுங்குதல் ஆகிய தன்மைகளை யறிவிற்களிக்கும் இயற்கை யுடையதும், எட்டுத்திக்கும் மேலுங் கீழும் செல்லக் கூடிய தசநாடிகள் சூழவுள்ள மூலத்தலத்தைத் தனக்கிடமாய்க் கொண்ட துரியாதீதத்தைத் தசரதனுக்கும் எழுபத்தீராயிரம் நாடிகளை யுடையதாய் விளங்கும் ஆறு ஆதாரங்களில், ஐந்து ஆதாரங்களையும் அறுபதினுயிரம் நாடிகளையுங் கொண்டு அண்டமென்னுஞ் சிரத்தின் கீழுள்ள பிண்டமென்னும் உடலத்தில் விளங்கி தசரத னென்னும் துரியாதீதம் தொடர்புற இயங்குவன வாகிய பிண்ட நாடிகள் அறுபதினுயிரத்தைத் தசரதன் மனைவியர் அறுபதினுயிரவர்களுக்கும், அந்த நாடிக் கூட்டங்கள் துரியாதீத மாகிய வுணர்ச்சிக்கு மட்டும் இடமுகை இல்லாமல், ஒராண்டிற்குரிய நாட்களாகிய முன்னூற்றறுபது ரவி மதி கூடிய எண்ணிக்கை யளவாய் நாழிகைப் போதில் நடை கொள்ளலால் தசரதன் வாழ்ந்தது அறுபதினுயிரம்

Koviloor Digital Library

ஆண்டென்பதற்கும், பரிசுத்த நிலையமாகிய மூலத் தலத்தை இயோத்தி யென்னும் தோடத்திற் கெதிர் மறையாம் பெயர் கொண்டுள்ள அயோத்திக்கும் துரியாதீத மென்னும் தசரதன் மூளையைச் சாராமல் பிண்ட நாடி சுழுலை மட்டும் தொடர்பு கொண்டுள்ள காலம் மனந்தோன்றுத குழவிப் பருவக்கால மாகையால் அறுபதினுயிரம் ஆண்டுகளாக அறுபதினுயிரம் மனைவிகளுடன் வாழ்ந்தும் புத்திரப்பேறில்லாமைக்கும், உடலிற் காணப்படும் அடையாளச் சுவடாம் வசியை இட்டாய்க் கொள்ளும் இயற்கை யுடைய தாதுவாம் மூளையை வசிட்டனுக்கும், துரியாதீதம் மூளையோடு உறவு கொள்ளலை தசரதன் வசிட்டனைக் குலக் குருவாய்க் கொள்ளலுக்கும், அத்தி உரோமநிலை பேற்றிற்குரிய தாகையால் அதை ரோமபாத நகரத்திற்கும் அறுபத்து நான்கு கலைகளுக்கும் மத்தியில் கோடிட்டுப் பகுத்தாலேற்படும் எண்ணிக்கை யளவாய முப்பத்திரண்டாக ரோமபாதமாகிய அத்தி யினின்று தசனந் தோன்றலால் அதைக் கலைக் கோட்டு முனிவருக்கும், எயிற்றின் உணர்வெழுச்சி நீர்ச் சுரப்பிற்குக் காரணம் ஆகையால் அவர் வருகை மழை வருகை யாவதற்கும் மூளையுணர்வும், எயிற்றுணர்வெழுச்சியும், உணவு வேட்கையையும், உதராக்கினியையும் எழுப்பச் செயற்படுவது வசிட்டரும் கலைகோட்டாரும் புத்திரக்காம் இட்டி செய்ததற்கும், உதராக் கினியில் உதானன் தோன்றல் வேள்வியில் பூதம் தோன்றியமைக்கும் அறுபதினுயிரம் நாடிகளில் முதன்மையானவை மூன்று நாடிகளே

Koviloor Digital Library

யாகையால் அவற்றை தசரதர் மனைவி மூவருக்கும் கோ - என்னும் பசுவாகிய பிராணனைச் சலமுறச் செய்து பிராண வாயுவென நடை கொள்ளச் செய்யும் அநாகதத்தைக் கோசலைக்கும், ஐந்து பிரிவுகளைக் கொண்ட ஒன்ருயும் வலிமைமிக்க தாயுமுள்ள விசுத்திக்குக் கைகயையும், இடை பின் கலைகள் இரண்டும் ஒன்று கூடும் நலம் மிக்க இடமாகிய அக்க இணைய இயற்ருனத்திற்குச் சுமித்திரையையும், உதானவாயுவால் மூன்று தானங்களும், வலிவுடைத்தாதல் பூதந் தந்த பாயாசம் உண்டமைக்கும். துரியாதீதம் மூளையைச் சார எயிருணர் வெழுச்சி யுமிழ்நீர் சுரப்பால் உணவருந்தி உதராக்கினி சொலிக்க வுதான வாயு தொழிற் செய்யக் கலா நிலையங்கள் மூன்றும் வலுப்பெற்று மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கும் தோன்றல் மூவரும் நான்கு புத்திரர்களைப் பெற்றதற்கும், பிரமத்தினின்றும் விடுபட்ட அணுவாம் "விட்டணு" என்னும் உயிரின் எதிர்நிலைப் பாட்டாற் ருேன்றும் எழில்பெற்ற இயலை யுடையது மனமாகையால், அதற்கு "ராமா" என்னும் "அரா.உமா" நாமத்தையும்; ஒன்று மற்றுென்ருய் அமைபு நயங்கொண்டு நடிக்கும் பரதத் தியற்கையைக் கொண்ட அகங்காரத்திற்குப் பரத நாமத்தையும், இலக்கு என்னும் எண்ணத்தின் வண்ணமாம் நிலைபேற்றைக் குறிக்கும் புத்திக்கு இலக்கு வண நாமத்தையும், மாறுபட்டலைக்கும் சத்துருக்கினன் என்னுந் தன்மை வாய்ந்த சித்தத்திற்குச் சத்துருக்கினன்

Koviloor Digital Library

நாமத்தையும் இலக்கியமாகக் கூறப்பெற்றதே இராமாயண இலக்கியத்திற் றேன்றும் யோகாந்தச் சிவரகசிய மென்றுணர்க இதற்கு நமது இராமாயண இலக்கியச் செய்யுள்.

அறிவோ மெனுந்துரி யாதிதமூலத் தமைந்து தசநாடிசூழத்
செறியல் தசரத ராறுபத் தாயிரந் தேவிசமை பிண்டநாடி
நெறியா மயோத்தி பரிசுத்தத்தான நிலையறுபத்தாயிராண்டும்
வறிதே சுதனிலா தாளல் குழவிமனமுதிக் காதவயதே.

வயமிகு முளைப்படி யறிவாதி வயங்கல் வசிட்ட முனிவ
ருயர்குரு வாக லுரோம பதமெனும் புற்பத்தியாக்கு தசனம்
நயமாங் கலைக்கோட வர்வைகுநேய நமைாரிபெய்யனுமிழ்நீர்
அயர்வறச் செய்யவர் வேள்வி யுணரா மனமீந்த பூதயூவே.

அதுவே யுதானன் கலைமூன்று றுந்தான மாங்கோ
சலைகேகயன் பெண்
னதுவுஞ் சுமித்திரா தேவியிம் மூவரவரீன்ற நான்கு பெயராம்
புதல்வ ரிராமன் மனமாம் பரதனே பொங்ககங் காரமிணையாங்
சுதர்களி லக்குவன் புத்தி சத்ருக்கனன் றூய்மையாஞ்
சித்தமிவையே.

தசரத சக்கர வர்த்தி திருக்குமாரர்கள் நால்வரும் மகிழ்ச்சி பொங்க வளர்ந்துவருங் காலையில்விச்வா மித்திர மாமுனிவர் தாம் செய்யும் வேள்வி ஊறுபாடின்றி நிறைவெய்துவதற்குதவியாக ராம லக்குவணர்களைப் பெற்றுக்கொண்டு செல்லும் வழியில் அங்கதேசம் சென்று

Koviloor Digital Library

கொடிய வெப்பத்தை யுமிழாநின்ற வெஞ்சுரத்தையுடைய பாஉலநிலத்தைச் சாருங்கால் குழந்தைகள் வெப்பஞ் தாங்கமாட்டார்கள் என்று கருதிய முனிவர் ஒரு விஞ்சையை ஓதுவித்ததனுல் குளிர் பூஞ்சோஉலயென அந்த வெப்பம் மிகுந்த கொடுஞ் சுரம் ஆகும்படி செய்து, அகத்திய முனிவரின் சாபத்தால் அரக்கியாகிச் சொல்லொணுத் தீமைகள் பல செய்து வரும் தாடகையென்னும் அரக்கியானவள் மாய்ந்தழியும் படியாக ராமன் கஉண தொடுத்து. அழிக்க, மேலும் நடந்து அங்கு பெருகியோடும் சோஉண நதியையுங் கடந்து எழில் மிக்க சோஉலயைச் சார்ந்து முனிவரானவர் தமது வேள்வியைத் தொடங்க, அதற்குக் காவல் தசரத குமாரர்கள் ராம லக்குவணர்கள் செய்யலால் சுவாகு முதலிய அரக்கர்கள் கூட்டம் அழிய. அது கண்ட மாரீசன் ஓடிமறைந்து விட, முனிவர் செய்த வேள்வி இனிதே நிறைவுற்றது என்பன கம்பராமாயணத்திற் கையடைப்படலம் தாடகைவதைப் படலம் வேள்விப் படலம் ஆகியன வற்றுள் காணப்படும் துராலிங்கவுரையாம்.

இதை இப்படியே அவினயனுருரையாகப் பார்த்து இது எவ்வாறு பொருந்தும்? அரும்பெறற்புதல் வர்கஉள ஒரு துறவியின் பின்னுல் மன்னர் மன்னன் காடும், மேடும், கடுஞ் சுரமும் கால்நடையாகவே கடந்து செல்லும்படி யனுப்புவது, தான் செய்யும் வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர் பகையைச் செகுக்க மாட்டாத முனிவன், வெய்யலும், வெய்யலால் ஏற்பட்ட வெப்பமும் நீங்கும்

Koviloor Digital Library

வண்ணம் விஞ்சை யோதுவித்து இயற்கையை வெல்விப்பது, கொலைக்குண கொடுந்தொழி லரக்கியைப் பெருமிதமாக இராமன் அழிப்பது, வேள்வியை அழிக்க வந்த அரக்கர் கும்பலை இராமன் ஒருவனே யழிப்பது, இவைகள் யாவும் நடைமுறைக்கு ஒவ்வாதனவாம் என்று கழறம்பல் உரைதோன்றுவது நீங்க

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று என்னும்
மெய்யுணர்வுடைய மன்னவன்
இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து

அதனை அவன்கண் விட்டதும் வினைக்குரிய நாடியபின் யவனை அதற்குரியவனாக முனிவன் ஆக்கிக் கொண்டதும் உணராமல் சொல்லும் செயிற்றிய வுரையாம் எனவிடுத்து, இதற்குச் சரியான இயைபுள்ள சரியையாக, ஆமாசயம் என்னும் இரப்பையானது விளைவைத் தரும்பாங்கை கொண்டுள்ள தாகையால் விச்சுவ மித்திரனென்னும் பெயர்க் காரணம் பெற்ற முனிவருக்கும், ஆமாசயத் தொழிலாகிய தீவணச் செயற்பாடாம் செறிமானம் விச்சுவாமித்திரர் வேள்விக்கும் மனம்புத்தித் தொடர்புள்ள நாடிநடை ஆமாசயத்தை யணுகவில்லையேல் செறிமானம் ஏற்படற்கு, இடறுநேருவது யியற்கையாகையால் அதை விச்சுவா மித்திரர் வேள்விக்கு இடையூறு நேர்ந்ததற்கும் மனமும் அதன்தெளிவாகிய புத்தியும் ஆமாசய இயக்கங்

காரணமாக மூலாதாரத்தினின்றுஞ் சுவாதிட் டானத்தை நாடிநடைகொள்ளலை விச்சுவாமித்ர முனிவர் அயோத்தியின்னின்றும் இராம இலக்குவணர்களை யழைத்துக் கொண்டு அங்கதேசத்தின் வழிச் சார்புற்றமைக்கும், மணிபூரகஞ் சார்புற்ற வழித்தோன்றும் வெப்பமிக்க வறட்சி அனலுமிழ் கொடுஞ் சுரத்தையுடைய பாலைநிலத்திற்கும், ஆமாசய இயக்கத் தொடர் கொண்ட மனம்புத்தி நாடி நடை கொள்ளலால் அவ்விடம் வறட்சி நீங்கிக் குளுமை தோன்றல் விசுவாமித்திரனுதவிய விஞ்சையை யோதிக் குளிர் பூஞ்சோலையென அதைக் கடந்தமைக்கும், மூலத்தழற் கதிப்பால் நாகன் என்னும் வாயு தோன்றித் தாடையை அசைத்தல் (தாடை, மோவாய் அசைத்தல் வருத்துதல்) செய்யுமியற்கையாம் விக்கல் உண்டாக்கலை அகத்தியர் சாபத்தால் அரக்கியர் உருப்பெற்ற தாடகை கொடுந்தீங்காம் அழிவுச் செயல் புரிவதற்கும், அவளை மிகப் பெருமிதமாக இராமன் ஓரம்பால் அழித்தல் மனோ வாயு நடைகொள் கதிப்பால் எளிமையில் விக்கல், கக்கல், நீக்கம் பெறும் வண்ணம் நாகன் என்னும் வாயு பணிதலுக்கும், மேலும் ஆமாச்சயச் செறிமானத் தீவணக் கதிப்பைச் சார்ந்த மனோவாயுத் தெளிவு அநாகதத்தைச் சார்ந்து ஆமாசயத் தொழிற் செம்மையுறும் வண்ணம் நடைகொள்ளலால் களைப்பையும் தவனத்தையும் உண்டாக்கும் வியான வாயுக் கொடுமை மறைதல், விசுவாமித்திரரோடும் இராம இலக்குவணர்கள் அங்கண்

Koviloor Digital Library

ஓடுகின்ற சோஊண நதியைக் கடந்து எழில்மிக்க செறிவைக் கொண்ட சோஉலயை யணுகி விசுவாமித்திரர் தவவேள்வியைத் தொடங்கிச் செய்ய அதற்குக் காவல் தசரத புத்திரர்கள் செய்யலால் அரக்கர்கள் அழிவுற, மாரீசன் ஓடிச் சமுத்திரத்தில் ஒழிய அதனால் முனிவர் செய்த வேள்வி இனிதே நிறைவுற்ற தென்பதற்கும் இலக்கியமாகக் கூறப்பெற்றதே இராமாயண இலக்கியத்தில் தோன்றும் யோகாந்தச் சிவரகசியம் என்றுணர்க. இதற்கு நமது இராமாயண இலக்கியச் செய்யுள்.

இவை தோற்றியபின் வருவிசு வாமித்திரரா மவாச யமதாம்
அவர்செயும் வேள்வியா மாசயத் தின்றெழிலாகு
மிடையூறகற்றத்
தவமுனி ராம இலக்குவ னோடங்கஞ் சாரல் சுகமாந்தலத்தில்
நவமா மனம்புத்தி செல்லல் கடுஞ்சுரம் நண்ணல் மனபூரகத்தே

அகம்புத்தி செல்ல வதுவெம்மை மாறலருவிஞ் சையாற்குளிறலா
மகத்தியர் சாபத் தரக்கியாய்த் தாடகை யண்டாத தீமைபுரிதன்
மிகவெய்ய மூலவழிலினு லேநாகன் விக்க லுண்டாக்க லவௗப்
பகழியாற் கோற லழன்மாற நாகன் பணிவாகல் பின்னரவர்கள்.

அவனோடு சோஊண நதியைக் கடந்தோ ரழகான சூழலணுகி
தவமுயன் றேமக மாற்றிடக் காவறரசன் செல்வர் செயலால்
பவஞ்செய் யரக்க ரழியமா ரீசன்பதுங்க லுகை தமதின்
நவமா மனம்புத்தி செல்லவா மாசய நன்று யியங்கவதனால்.

விசுவாமித்திர முனிவர் இராம இலக்குவணர்களை உடன் அழைத்துக் கொண்டு மிதுலாபுரி நகரை நோக்கிச் செல்லுகின்றூர். அவ்வழியிற் கண்கவர் வனப்புடன் மடுவொன்று தோன்றுகிறது. அதைக் காட்டி இதுவே முருகவேள் உற்பவித்த சரவணப் பொய்கை யென்று மொழிந்து, மேலே செல்லுங்கால் எதிர்ரேன்றும் பல்வளங் கொளிக்கும் செழும்புனல் தீர்த்தமியாதென வினவ இதுவே கங்கை நதியென்று அதன் வரலாறு கூறி மேலும் நடந்து மிதுலாபுரி நகரை அணுகுங்கால் தனது காலடிச் சுவடு பட்ட மாத்திரத்தில் கருங்கற் பாறை மறைந்து எழில் நிறை வனப்புடன் ஒருமாது எதிருற்று வணங்குவது கண்டு அதிசயித்த கோசலை செல்வன், முனிவரிடங் கேட்டு, கௌதமருடைய பத்தினியே யவளென்றும், கௌதமராற் சபிக்கப்பட்ட வரலாறும் உணர்ந்து, அம்மங்கையைக் கோதமரிடஞ் சேர்த்து மேலும் மிதுலாபுரி நகரை யடைகிருர்கள் என்பன இராமாயணத்தில் அகலியைப் படலம் முழுவதிலும் காணப்பெறும் துராலிங்க உரையாம்.

இதை இப்படியே அவினயவுருரையாகப் பார்த்து முனிவரொருவர் சாபங்காரணமாகப் பெண் ணொருத்தி கற்பாறை யாஞள் என்னும், அது அங்கு கோட்டமுடைத்தாக ஆசிரியரை அதங் கோட்டாசிரியராக யாக்கி விட்ட தென்னில் செயற்கரிய செய்வர் பெரியர் என்னும் மெய்ம் மொழியுணராத செயற்கரிய செய்யலாகச் சிறியார் உரைக்கும் செயிற்றிய வுரையெனவிடுத்து, இதற்குச்

Koviloor Digital Library

சரியான இயைபுள்ள சரியையாக, மனம் புத்தி யிரண்டும் ஆமாயச் சார்பு பெற்ற வலிமையால் அக்க இணையம் நிலையம் நாடி நடை கொள்ளலை இராம லக்குவணர்கள் மிதுலாபுரி நகரை நாடி முனிவர்பின் செல்வதற்கும் அக்க இணைய நிலையத்தை யணுகும் போது சந்திக்கும் விசுத்தியைச் சரவணப் பொய்கையைக் கண்ணுற்றதற்கும் விசுத்தியையும் கடந்து மேற்செல்லுவதை மேலும் அவர்கள் நடைகொண்டு சென்றதற்கும். அண்டத்தினின்றும் கால்கொண்டு கண்ட தாரை இடமாகக் கீழ்நோக்கி இழியும் சுவாசகதிச் சூழலொலித் தாரையை யணுகி மேல்நோக்கலைக் கங்கையைக் கண்டு நடை கொள்ளலுக்கும், நடுவில் முனையும் இடம்வலம் ஆய இரண்டு தலைப்புக்களை யுடையதாய் இயங்கி நிலை கொள்ளும் துலைக்கோலுக்கு நிகராம் மேன்மை பெற்றுள்ளமையால் மிதுலையென்னும் அக்க இணைய நிலையத்தை மனம் சார்பு கொள்ளலாய காரணத்தால் தேவதத்தன் வாயு வலிமைப் பெற்றுச் சொல் மொழியுந் திறம் உண்டாதலாம் இயற்கையை இராமனடிச் சுவட்டால் அகலியை கற்பாறையுருவம் நீங்கி பெண்ணுருவான மைக்கும் அகல இடங்கொள்ள இயம் - ஒலி உண்டாக்கும் செயற்பாட்டைக் கொண்ட அகலியை யென்னும் தேவதத்தன் அகல இயம் உண்டாக்குந் தொழிற் செயற்பாடு துருவாசனென்னும் மலாசயத்தை யடுத்துள்ளதும் கோது அமணமும் ஆம் இயற்கை யுடைமையாற் கோதமன் என்னும் சலாசயத் தானமாம்,

Koviloor Digital Library

மணிபூரகத் தானத்தைச் சார்பு கொண்டா லன்றி யுண்டாகா தாகையால் அகலியைக் கோதமரிடஞ் சேர்த்தமைக்கும் இவ்வாறும் விளைவை கொண்டதான மனே நிலை அக்க இணைய இய நிலையாம் ஆருவது தலத்தை யடைதலை விச்சுவாமித் திரரோடுங் கூட ராமலக்குவணர்கள் மிதுலையடைதலுக்கும் இயைய வமைத்து இலக்கிய மாகக் கூறப் பெற்றதே இராமாயண இலக்கியத்திற்ரேன்றும் யோகாந்தச் சிவரகசியம் என்றுணர்க.

இதற்கு நமது இராமாயண இலக்கியச் செய்யுள்

அதமாங் களைப்புத் தவன்மிக வுமுண் டாக்கும் வியானன்
னடங்கல்
லதன்பின் மிதுலை செலல்மனம் புத்தியா மாசயஞ் சேருதெளிவாற்
பதமா மகனற் றலைஞ்சேர லைவ்வழிப்பார்க்குஞ் சரவணமதும்
அதனைக் கடந்து செலலும் விசுத்தி யதுகடந்தேக நலமே.

நலமே தருங்கங்கை தோன்ற லகனய நாடன் மிதுலை நகரத்
தலமேக ராமன் கழலாற் கருங்கல் லதானதொருபெண்
ணணங்காய்
நலமெய்தல் சிந்தை யறிவு மகயை நண்ணலுமே தேவதத்தன்
பலமுற் றினியவர்க் குண்டாதல்கோதமன் பாரி யகல்லி யயையே.

அகலியை கோதமர்ச் சேர்த்து மிதுலை யடைதல் துருவாசனென்னு
மிகநலஞ் சேரமல மகற்றுசய மேலாஞ் சவைாசயத்தி
லகலிய மாந்தேவ தத்தனணுக வகனயத் தானமடைதல்
(மிகவாந் துலாநக ரெய்தியே யங்கொரு மேனிலைக் கண்ணழகியை)

Koviloor Digital Library

மிதுலாபுரி நகரையெய்தி அவ்விடத்திலுள்ள உப இருக்கை யொன்றில் அழகே யோருருக் கொண்டன்ன எழினலமிக்காளை இராமன் கண்ணுறுக்குறுங் காலையில் அவ்வாறே அப்பெண்ணணங்கும் இராமனை நோக்க வதனால் அவ்வெழினல நுகர்விற் றிளைத்து அயர்வுற்றமை நீங்கிச் சதானந்த முனிவரில்லம் அடைந்து தங்கி வேள்வி காணும் பொருட்டுச் சனகமகா ராசனின் அரசவை சென்று அறுபதினாயிரம் வீரர்களால் தாங்கி கொணரப்பட்ட சிவதனுசாகிய வில்லைக் கண்டு யாராலும் வளைக்க முடியாத அந்த வில்லின் வரலாறுணர்ந்து சனகமகாராசன் வேள்வி செய்யும் பொருட்டு நிலத்தை உழவு செய்யும் போது கலப்பையின் கொழு முகத்திற் கிடைத்த சீதை யென்னும் பெண்ணழகியின் சிறப்பினையும், அவ்வில்லை வளைப்பவருக்குச் சீதையுரியவளாம் என்பதையும் கூறக் கேட்டு உவகை பூத்த இராமன். அந்த வில்லை மிகஎளிதா யெடுத்து நிறுத்தி வளைக்கவும்வில் இரண்டாய் முறிந்து விழக் கண்ட அனைவரும் மனமிக மகிழ்வெய்தினர்கள். இராமனுக்கும் சீதா தேவிக்கும் திருமணம் என்று எங்கெங்கும் அழைப்புக்கள் சென்றன. மூவுலகத்தினரும் சீதைராமன் கல்யாணங் காண வந்து நிறைந்தார்கள். அறநெறிப் படி கல்யாணச் சடங்குகளெல்லாம் நிகழ்வுற்றன. சனகியை ராமன் மணமாலை சூட்டிய பின்னர் முறையே பரதன் இலக்குவணன் சத்துருக்கினன் மூவருக்கும் சனக மகாராசன் பெண்கள் மூவரையும் திருமணம் செய்தார்கள்

Koviloor Digital Library

என்பன, மிதுலைக் காட்சிப் படலம், குலமுறைக் கிளத்துப் படலம் கார்முகப் படலம், எழுச்சிப் படலம், வரை காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர்விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம், எதிர்கோட் படலம், உலாவியற் படலம் கோலங்காண் படலம். கடிமணப் படலம், ஆய பன்னிரண்டு படலங்களிலும் பண அம்பாரமாய் விரிந்துரை செய்தவற்றுள் காணப்படும் துராலிங்க உரை.

இதை இப்படியே அவினயனுருரையாகப் பார்த்து சிவதனுசாகிய மேரு ஓரரசன் அரண்மனையகத் தடக்க முடியுமா? அறுபதினுயிரம் பலசாலிகள் தாங்கிக் கொணரும் வில்நீளம் எவ்வளவாகும்? அது இருக்க அமைந்த இடம் கொணர்ந்து வைத்தவிடம் ஓரரண்மனைக்குட் இருக்க முடியுமா? அதை எவ்வளவுதான் வலிமை பெற்றவனுக இருந்தாலும் ஒருவன் எடுத்து எளிதில் வளைத்தான் என்பதும், அந்த விசையில் அதுவும் முரிந்து வீழ்ந்ததென்பதும் நடக்கக் கூடிய காரியமா? மேலும் நிலத்தை உழும்போது அழகிய பெண்மகவு தோன்றிற் றென்பது ஏற்படக் கூடிய நிகழ்ச்சியாகுமா? ஓ! இதுதான் புராணப் புளுகு என்று கழறும் அம்பல் உரைநீங்க முழுவிளக்கமுந் தருகிரேம்.

"சீவனென்னச் சிவனென்ன வேறில்லை" என்று ஆகமம் (திருமந்திரம்) கூறும். சீவனதனுதி முறைமையான பழமையைக் கூறும் "சீவபுராணம்" "சிவபுராணம்" என்று வழாங்குவது கண்கூடு, அவ்வாறே சீவனுகிய வியாழனைச்

Koviloor Digital Library
சிவனென்றும், அவனுக்குரியதனு ராசியை வில்லென்றும், அந்த வில்லைத் தாங்கும் வியாழன் ஆறுபத்து ஆண்டென்னும் அளவையுள்ளவனுய் எண்ணற்ற உடம்புகள் தோன்றித் தோன்றி யழிந்து சாகுங்காலத்திற் சாகாத்திரம் பெற்று (சகத்திரம் பெற்று) நிற்கும் சீவனுகையால் அவனுக்குரியது அந்த வில்லாகையால் அறுபதினுயிரம் பெயர்களாற்ருங்கும் வலிமையுள்ள வில் அது என்றும், சனக புத்திரியாகிய சனகி வெருள் செய்யும் இராசியாகிய விருட்சிக. ராசியிற் பிறந்து, அந்த ராசிக்குரிய செவ்வாய் தனுசிலும் தனுசிற்குரிய வியாழன் விருட்சி கத்திலும், நிற்கப் பெற்றிருந்தமையால் அந்தவில் அவனுக்கு எளிமையாய் இருந்ததென்றும், இவ்வாறு வில்லவனுன வியாழனும் வல்லவனுன செவ்வாயும். பரிவொற்றனைவு கொண்ட செயற்றகவுக் குறிப்பை (சாதகக் குறிப்பை) யுடைய வருக்கே அவளையுரிமைப் படுத்துதல் நியதியாகையால், அவ்வாறில்லாத பலர் உரிமைப் பாடு கொள்ள முடியாமையைப் பலர் வில்லாற் ரேல்வி யுற்ருர்கள் என்றும், வின்மைக் கொருத்தனுகிய வியாழனும், வன்மைக் கொருத்தனுகிய செவ்வாயும் உச்சம் பெற்று உதய கண்டத்திலும் பாட்டுக் கண்டத்தில் நின்று பரிவொற்றனை நோக்குக் கொண்ட செயற்றகவுக் (சாதகக்) குறிப்பு, பொற்பினுக் கொருத்தனுகிய பொன்னவன் இலக்கினத்தில் உச்சம் பெற, அப்பொன்னவன் வீட்டில் அழகுடைமை யனைத்தும் பொருந்தச் செய்யுங் காரகனுகிய சுக்கிரன் உச்சம்

Koviloor Digital Library

பெற வமைந்த கடக ராசிச் சந்திரனை லக்கினமாகக் கொண்டு பிறந்த காரணத்தால் இராமசந்திரன் என்று காரணப் பெயர்கொண்ட சக்கரவர்த்தித் திருமகனுக்கு இருந்த பொருத்த முணர்ந்த முனிவர் அரசனுக்கெடுத்துக் கூறியதை வில்லை வளைத்து மங்கையை மணஞ் செய்ய வல்லானென முனிவர் கூறினரென்றும், அந்த வில்லாகி தனுசு ராசி கடக லக்கினத்திற்கு ஆருவதாகவும் தனுசிற்குக் கடகம் எட்டாவதாகவும் அமைய அக்கடக ராசியில் அறுபதினாயிரவர்கள் தாங்கும் தனுசிற்குரிய வருகிய வியாழன் தன் பலத்தினும் பதின்மடங்கு அதிக பலம் பெற்று அப்பலத்தைச் சந்திரனுக்களித்து நிற்க அச் சந்திரனைச் தனது லக்கினதிபதியாகக் கொண்ட வராக இராமசந்திர மூர்த்தி விளங்கு மியல்புச் சனகிக்குச் சூட்டும் திருமணமாலையை எடுப்பது போன்று, அவ்வில்லைச் சாதாரணமாக எடுத்து வளைத்தா ரென்றும், அது இரண்டாக முரிவுற்ற தென்றும் அரசர்கள் பொன்னேர் பூட்டி உழும் நாளாகிய சித்திரை மாத முதற்றேதியிற் சனக மகாராசன் பொன்னேர் பூட்டி உழுது வரும்போது, தோன்றியமையாலும் உழுவே கட அக்கினி, கமல அக்கினி, தீப அக்கினி ஆகிய மூன்று தீயும் வளர்க்க முதற்காரணமாகையால் அந்த வுழவு வேள்விக்காகச் செய்த வுழவென்றும் அவ்வுழவில் இந்தப் பெண் மகவு தோன்றிற் றென்றும் அதன் சன்ம லக்கினமும் அநுடமீனில் நின்றமையாலும் அநுடமீன் இலக்குமிதேவிக்குரிய நாளாகையாலும், அது திருமகள் அவதாரமென்றும் ஆக

Koviloor Digital Library

சித்திரை மாதம் முதற்றேதி விருட்சிக லக்கினத்தில் பெண் தோன்றிய வரலாற்றை அழியாமல் என்றென்றும் நினைவுறுத்தவே இலக்குமிதேவியே சீதா தேவியாகச் சனக மகாராசன் வேள்விக்காக நிலத்தை யுழும்போது பெண்மகவாய்த் தோன்றினளென்றும், கூறிய வான்மீகி முனிவர், மக்கட்பிறப்பினர்களியாவரும் தங்கள் தங்கட்குரிய முக்காலத்தியல்பைக் கண்டறியற்கு எடுத்துக் காட்டாய் முதன்மை மீக்கூர்கோள் நிலையாளர்களை வகுத்துரைத்த வற்றுள் பஞ்ச கன்னியர்களில் ஒருத்தியே சீதையாகத் தோன்றினள் என்பதை யுணர்த்த, சீதாதேவியைப் பற்றி வேறிடங்களிற் கூறியவற்றை ஈண்டுக் கூறி முழுவிளக்கமும் தருகிறோம்.

மேற்கண்ட இயல்விளக்கத்தால் சித்திரை மாதம் முதல் தேதியன்று விருச்சிக லக்கினத்தில் பெண் மகவு தோன்றிற்று. இலக்கினத்தில் வியாழனும் இரண்டிற் செவ்வாயும் நின்றன, என்ற வரையிலும் கண்டோம். சித்திரை மாதமாகையால் மேடத்தில் சூரியன் உச்சம் பெற்று நிற்கின்றார் என்பதும் தெளிவாகின்றது. சூரியனுக்கு அண்மையில் நிற்கும் கோளாகிய புதன் நிலையை யுணர்த்தவே திருமாலவதாரமாய் வந்த நீலமேனியனாகிய இராமன் தரையின் மீது நின்று உபஇருக்கையில் நின்று உலவும் திருமகளவதாரமாய் வந்த சீதையை நோக்க,அவளும் அவ்வாறே இராமனை நோக்கினள் என்று கூறுகிறார் மாலவனும் பச்சையும், சாமனும் புதன் அவனல்

Koviloor Digital Library

நோக்கப் பெறுவதாக இலக்கினம் அமைந்திருக்கிறது. அவன் நின்று நோக்குமிடம் வையம் என்னும் பெயரையுடைய ரோகினி நட்சத்திரம். அதற்குரிய இராசி இடபம். இடபத்திற் புதன் நின்று உபஇருக்கையாகப் பொன்னவன் நிற்கும் விருட்சிக ராசியை நோக்க, அவ்விராசியில் நிற்கும் பொன்னவனும் மாலவனுகிய புதனை நோக்குகிருன். புதன் நேர்பார்வையாகிய ஏழாம் பார்வை மட்டும் உடையவன். ஏழாமிடம் களத்திரத் தானம். அதை அவன் நோக்க வேண்டியவனே, பிறன்மனை நோக்காத பேராண்மையுடையோனை யிராமன் கண்ணும் கருத்தும் தவருன வழியிற் செல்லா தெனவும், அவ்வாறு சென்றதால் அப்பெண்ணணங்கு தமக்கு உரியவளாக அமையக் கூடுமென அவன் மனந்தேறியிருந்தானெனவும் கூறுவதன் மூலம் இடபராசியில் ரோகினி நட்ச்திரத்தில் புதன் நின்று விருட்சிக லக்கனத்தில் நிற்கும் குருவை ஏழாம் பார்வையாகப் பார்க்கின்ருர் என்பது தெளிவாகி விட்டது. இப்பொழுது சீதாதேவியாகத் தோன்றிய பெண்ணின் நல்லாள் முற்பிறப்பில் சுவேதவதியென்னும் பெயரையுடையவளாய் அந்தணர் குலமாதாக இருந்து தவமுஞற்றி வருங்காலையில் இராவணன் காதல் கூர்ந்த நோக்குடன் வலிந்தணுகக் கண்டு தழலின் மறைந்து அவனை அழித்தொழிப் பதற்கே வந்தவள் என்று கூறுவதால் பூர்வபுண்ணியத் தானமாகிய செய்யுஞ் சித்த நிலைய (சஞ்சித நிலைய) மென்னும் ஐந்தாமிடம் அந்தணன் இல்லமாகிய மீன

Koviloor Digital Library

ராசி. அதில் சுவேத வண்ணனுகிய வெள்ளி (சுக்கிரன்) நிற்கின்முன். அவனைத் தலைநோக்கம் பத்துடையவனும் இராவண்ணனும் ஆகிய கரியவனென்னும் சனி கன்னியா ராசியில் நின்று ஏழாம் பார்வையாகப் பார்க்கின்முன் என்பதும் தெளிவாகிவிட்டது. முன்கூறிய தனுசு சிவதனுசு என்பதால் பாம்பாகிய இராகும் அதில் நிற்கிறதென்பதும், சபையோர்கள் காண வளைக்கப் பெற்றதென்பதால் சபையாகிய மிதுன ராசியில் ஞானகாரகனுகிய கேது நிற்கிருன் என்பதும் தெளிவாகிவிட்டது. விதுவாகிய சந்திரன் சூரியனுடன் ஒன்றுபட ஏகமாக நின்றமையை விளக்க அவளை வைதேகியென்றும், அவள் பிறந்த நாட்டையும் விதேகம் என்றும் நூலாசிரியராகிய முனிவர் பெருமான் கூறுவதால் சூரியனும் சந்திரனும் ஒன்ருகி நிற்கிதென்றும், அந்த நாளே அமாவாசையென்றும் சித்திரை மாதம் அமாவாசை அச்வதி நச்சத்திரத்திலேயே ஏற்படுமாகையால் சீதாதேவியின் சென்ம நட்சத்திரம் அச்வனியேயென்றும், அதில் விற்கம்ப நாமயோகமே அமைவுறும் ஆகையால் அதைக் கருதியும், இவளுடைய வில்லால் பகைவர் கம்பிதமடைந்தனர் என்று கூறுவது மேலும் மிகமிகப் பொருந்துவனவாக இருக்கிறது என்றும் இவ்வாருகிய திதி நட்சத்திர யோகங்களுக்குரித்தாய கரணம் சதுர்ப்பாதமே என்பது சொல்லாமலே விளங்குகிறதென்பதும் தெளிவாகிறது. தெளிவுற்ற வண்ணம் கோள்நிலையை வரன்முறைப்படுத்திப் பார்க்குங்கால் இலக்கினம் விருட்சிகம்

Koviloor Digital Library

அதில் வியாழன் இரண்டிற் செவ்வாய், இராகு ஐந்திற் சுக்கிரன் ஆறிற் சூரியன் சந்திரன் ஏழிற் புதன்; எட்டிற் கேது பதினொன்றிற் சனி ஆக அமைவுறப் பெறும். இவ்வாறு ஆக அமைவுற (ஆகாம் மியம்உற) முற்பிறப்பிற் பெறவுறு தவம் (பிராப்தம்) யாது என முற்பவநிலையாகிய பத்தாம் இடத்தைப் பார்க்கும் போது அது சிம்ம லக்கினமாகி எந்தக் கோள்களாலும் பார்வை பெருமல் இருப்பதால் முற்பிறப்பில் பஞ்ச கன்னியருளொருத்தியே சீதையென்றும் தெளிவாகிறது என்பன வாயவற்றை யெல்லாம் முனிவர் பெருமான் மனித கணங்களின் நலங் கருதிக் காக்கப்படு இனியனவான கலையாயமைத்துரைத்த பரிபாஷையின் இயல்கண்டு கூறினேம். இதற்குச் சரியான இயல்புள்ள சரியையாக,

ஏற்றத் தாழ்வுகளை யுடையதாய் இருபக்கமுஞ் சலிக்கு மியல்புடைத்தாகி இருவினையொப்பு வருங்கால் நேர்நின்று மலபரிபாகத்தை யுணர்த்தும் தன்மை வாய்ந்த நடுவொன்றுடன் கூடியுள்ளதான சுழிமுனை நாடித் தானமாகிய அக்க இணையியற் றுனத்தின் மனஞ்சார்புறலை இராமன் மிதுலையம் பதியைச் சார்ந்தமைக்கும். அந்த நிலையம் தூலத்திலுள்ள கருவிகள் அனைத்தையும் பொருந்திய ஒன்றுய் தூலமாகிய பிண்டத்தின் மேனிலையாகிய அண்டமாயிருப்பதால் அதை உப இருக்கைக்கும், அவ்வுப இருக்கையாம் மேனிலையில் ஏழாவது தாதுவாகிய சுக்கிலஞ் சனித்தற்குக் காரணமாகிய நாடி தோன்றி மிளிர்வதைச் சனகி உப இருக்கை யினின் றுலவியமைக்கும்

Koviloor Digital Library

அதையணுகிய இயல்பால் மனம் தன் வயமிழந்து சிக்குற்றுழல மியற்கை யெய்துவதை, இராமன் சனகியையும், சனகி இராமனையும் நோக்கிக் கருத்தொருமித்து வகை கொண்டமைக்கும், சிக்குற்றுச் சுழன்றலையும் இயல்புற்ற மனமானது இனிமையான வொலியால் தெளிவுபெற்றமைதியுறும் இயற்கையை சதானந்த முனிவரில்லஞ் சென்று அமைதியுற்றமைக்கும் சனனமுற்ற அகத்தை (சரீரத்தை) தனது இராச தானியாகக் கொள்ளும் உயிரைச் சனக மகாராசனுக்கும், அவ்வுயிர்த் தீயாகிய காமாக்கினியைச் சனக மகாராசனது வேள்விக்கும் எழுபத்தீராயிரம் நாடிக் கூட்டத்தையுடைய ஆறுதலங்களில் ஐந்து தலங்களையும் அவற்றிற்குரிய அறுபதினாயிரம் நாடிக் கூட்டங்களையும் சார்புறப்பெற்றதும். சீவாதாரத் தாதுத் தொடர்பின் இயங்கக் கூடியதுமான பிரமதண்டமென்னும் குருக்கினை அறுபதினாயிரம் வீரர்கள் தாங்கி நிற்கும் சிவதனுசிற்கும், "உ" என்னும் மேலெழுந்த இரண்டையும் "ழ" என்னும் உள்ளழுந்தும் ஒன்றையும் உடைமையால் "உழ" வென்னும் பெயரையுடையதும் உயிரியக்க வியங்குந் தகவினை யுடையதுமான பிராணவாயு நடைமுதிர்வாம் சுவாச கதியாற் றேன்றும் சுக்கிலத் திரட்சியைச் சனக மகாராசன் வேள்விக்காக நிலத்தை யுழும்போது கிடைத்த பெண்ணணங்காம் சீதைக்கும், மனம் சீவதாதுவைக் கூடியதால் ஏற்படும் இராகத் துவியங்களால் தனுவினின்று முரிவேற்பட (சுவாச

Koviloor Digital Library

கதி சென்றளவில் மீளாமல் முரிவாக) லாய வியற்கையை இராமன் வில்லை நாணேற்றி வளைக்க, அது முரிவுற்றமைக்கும் மனம் சுக்கில நாடியைக் கூடுமிடத்து எல்லாக் கருவிகளும் தொடர்புற்று விளங்குந் தன்மையை, சனகி இராமன் திருமணங் காண எல்லோரும் வந்து கூடியமைக்கும், மனம் சுக்கில நாடியைக் கூடியதால் இரத்தம், ஈரல், நிணம், ஆகியவை குலவுங் குலையை முறையே அகங்காரம், புத்தி, சித்தம், உறவு கொள்ளலை சீதாதேவி கல்யாணம் நிகழ்ந்ததும் சனகன் மகள் மூவரையும், பரதன், இலக்குவணன், சத்துருக்கினன் மூவருக்கும் திருமணஞ் செய்து கொடுத்தமைக்கும், இயைய வமைத்து இலக்கியமாகக் கூறப்பெற்றதே இராமாயண இலக்கியத்திற் றேன்றும் யோகாந்தச் சிவரகசியமென்றுணர்க.

இதற்கு நமது இராமாயண இலக்கியச் செய்யுள்

(மிகவாந் துளைநக ரெய்தியே யாங்கொரு மேனிலை கண்ணழகியை) இயைவுடன் நோக்க வவளுமவ் வாறே யிராமனை நோக்கவதனு லையர்வுற் றகன்று சதானந்த னில்லமடை தகைன நிலையத் துயர்விந் தனுகலுஞ் சிந்தைசிக் குற்றுழன் றேகையா நாதமதனி நயமே விரும்பி நிலைத்தல் சனகமா ராச னெனலதுயிரே

உடயிரா மவர்மகங் காமாக் கினியா முயரறு பத்தாயிரம்பேர் வயவர்கள் தாங்கும் வளைக்க வொண்ணுத வரிவில்லு பிண்டமதனு

Koviloor Digital Library

டியதறு பத்தா யிரஞ்சேர் ருருக்கா மிராச னுயர்வோங்கு வேள்வி
செயவே நிலத்தை யுழுகக் கிடைத்தவச் சீதைப் பெயரழகியோ.

அழகுறவேயுயி ராட்டுஞ் சுவாச மதனியக் கத்தாற் பிறக்கு
மெழில்விந் ததுவா மிராமன் சிலையை யெடுத்தே வளைக்க முரிவாய்
விழல்மனங் காம வசப்பட் டலைந்திட வேதண்டமஃதின்முரிய
தெழல்சா னகியிரா மன்மணங் காணவே யெல்லோரும் வந்து
நிறைதல்.

நிறைவாய் மனம்விந்து சேரக்கரு விகளெல்லா மிசைத்தே யிருந்த
விறையாஞ் சனகன் மகள் மூவரென்ப திரத்த மோடிரல் கொழுப்பா
முறையா யகங்காரமும் புத்தி சித்தமுறவா கிடல்பரதனே
டிறையா மிலக்குவணன் சத்ருக் கினனு மிவர்கள் வதுவை
செயலே.

இதுவரைக்கும் கருவுருவாய்ப் பிறந்து செயற்பாடொன்றிய உணர்வு தோன்றாது இருந்த பருவ இயலையும், அந்தப் பருவங் கடந்த பின்னர் தின்பன உண்பன வாதிய இயற்கைப் பேறடைய வுதவியாய் உமிழ்நீர்ச் சுரப்பை யுண்டாக்கும் எயிறு தோன்றும் ஆக்கந்தலைப்பட்ட பருவவியலையும் அவ்வியல் முதிர்வால் அகவுருப்புக்களெல்லாம் உரம்பெற, அதனுல் விக்கல் கக்கல் நீங்கப்பெற அச்செயற்பாட்டால் கருவிகளெல்லாம் ஆக்கமுடைத்தாய் கரணுதிகள் தோன்றிப் புலனுகர் வாயிலாய்ப் பொறியிலகப்பட்டுப் போக்கும் நீக்கும் கெட்டு அலைந்து முரிவுபட்ட பருவ இயலையும் கூறினேம்.

Koviloor Digital Library

இராமாயணம் பாலகாண்டம் திருவவதாரப் படலம் முதல் கடிமணப் படலம் ஈருகவுள்ள பதினேழு படலங்களிலும் காணப் பெறும் யோகாந்தச் சிவரகசிய வையாபிக வுரையாம் இதுவென்றுணர்க. இதற்கு நமது இராமாயண இலக்கியச் செய்யுள்,

செயனு மறிவுமில் லாதே யிருந்து பின்றின்னவும் உண்ணநமை
இயலைத் தசனமுண் டாயுள்ளுறுப்பு மியையவிக் கல்கக்கலில்லாச்
செயலாற் கருவி யெலாம்திரம் பெற்றதிறற் கரணுதிக ளுண்டாய்
மயலால் வழிதுறை கெட்டு முரியுண்ட வாணிகழத் தீதுவரையே.

இதுவரைக்கும் இராமாயண இலக்கியம் பூர்வ காண்டம் தோற்றப் படலத்தில் நாத்திக வேதை தீர் சருக்க முதலாகக் கொண்டு இராமகாதைச் சரியையாக யோகாந்தச் சிவரகசியப் பரிச்சேதவுரையை, நிரையசை ஆசிரியக் கட்டல்யாழ் பியந்தை வஞ்சியாப்பின் வாயிலாக நிகழ்த்திஞேம். இதில் வசிட்டர், விசுவாமித்திரர், கலைக்கோட்டார், அகத்தியர், கோதமர். துருவாசர் முதலிய முனிபுங்கவர்களின் செயற்பாட்டுக் குறிப்புகள் ஒரு அத்துக்குட்படுத்திக் கூறப்பெற்றிருக்கிறது. அவ்வத்தின் இயைந்த ஆயமாம் அத்தியாய வுரைத் தெளிவையும் தருகிரும்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

வசிட்ட ரிஷி விளக்கம்

க. வசிட்ட இருசி அத்தியாயம்

உயிர்நிலையாகிய ஆகத்தின் றன்மைச் சூக்கமே மனம். அந்த மனோகதித் துடிப்பைக் காட்டும் இயல்பையுடையது வாசி. அவ்வாசியைக் குருகி நிற்கும் மனத்தின் நினைப்பு யாவற்றையும் தன்னகத்தே பதிவுறச் செய்து வைத்துக் கொண்டு, வேண்டும் போதெல்லாம் அளிக்கும் இயற்றன்மையுடைமையால் வாசி குறுகிய வசியென்ற உடற் றழும்பிற்கும் வசிட்டர் என்ற பெயர், எண்ணக் குவியலை யெல்லாம் ஈட்டுந் தன்மையுடைய மூளைக்கும் கூறப் பெறுகிறது. அருந்தும் ஆறிரதத்தால் உண்டாகும் ஆறு தாதுக்களின் அதிகத்தால் உருப்பெற்று விளங்கும் அருந்ததியாம் சுக்கிலத்தைத் தன்னகத்தே யுடையதாக வசியீட்டமாகிய மூளை விளங்குதலால் வசிட்டர் அருந்ததி என்ற மனைவியை யுடையவர் என்றும் சொல்லப் பெறுகிறது. தோல், நரம்பு, எலும்பு, புலால் முதலியன விளங்கும் அகத்திலிருந்தே இத்தாது பிறப்பதால் தோல், எலும்பு, நரம்புத் தொழிலின் மாக்களாகிய சக்கிலியர் குலப்பெண்ணென்று கூறப்பெறுகிறது. "க" என்னும் ஒன்றினிடத்து அமைவதாற்கமை என்றும் அவ்வாறு அமைதலும் வெளித் தோன்ருதிருப்பதால் மறையும்

Koviloor Digital Library

இயல்புடைய திருடரின் பெயராகிய தேனர் எனவும் ஆகிய காமதேனுவென அகக் கருவிகளியாவும் ஒருமைப் பாடுடைத்தாய்த் தொடர்பு கொண்டு வெளித் தோன்ருதிருப்பதாகிய இயலைத் தனதாய்க் கொண்ட வசீயீட்டமாகிய தாது மூளையாகையால் வசிட்டர் காமதேனுவெனும் தெய்வப் பசுவை யுடையவர் என்றும், மூளையை உள்ளுறக் கொண்ட உறுப்புகளில் முதன்மையாயது சிரமேயாகையால் மூளையை உள்ளுறக் கொண்டு ஒன்றுட ஞென்று தொடர்பு கொண்டு விளங்கும் அத்தியாம் ச–அத்தி என்னும் எலும்புத் தொடர்கள் நூறு ஆகிய சத்தி முதலிய நூற்றுவர்களின் தந்தை வசிட்டர் என்றும், செயல்படு நிமித்தம் நெருங்கிப் பதிவுகொண்டு வெவ்வேருகித் தனித்துள்ளதாக மேற்கூறிய நூறு எலும்புகளும் உள்ளமையால் கன்ம அடற்பதனென்னும் கன்மாட பாதன் வசிட்டரின் புத்திரர் நூற்றுவரையும் விழுங்கி விட்டான் என்றும், சிரத்திலுள்ள உறுப்புக்கள் எத்தனையோ, அத்தனை எண்ணிக்கையுடைய யுறுப்புகளை உடைத்தாய் விளங்கும் இயற்கையுடைய உடம்பிற்கு ஆக்கம் விளைக்கும் செயற் காரணம் பற்றி விச்சுமித்திரனென்னும் பெயர் கொள்ளும் இரைப்பைக்கு எதிர்மாருந் தன்மையுடையது மூளையாகையால் விசுவாமித்திரனுற் படைக்கப்பட்டவரென்றும், பின்கலை நாடியில் விளங்கும் சூரிய கலையின் விளக்கம் யாவிற்கும் பலந்தரு மண்டலத்திலிருக்கும் இயற்றன்மையுடையது மூளையே யாகையால், சூரியகுல மன்னர்களுக்குக் குலகுரு

Koviloor Digital Library

வென்றும், சுருண்டு சுழித்து நாதமுடைத்தாய் வெண்ணிறம் பொருந்தி நின்று திரிபுறு மியற்கையால் திரிசங்கு என்னும் பெயரையுடைய கீழ்மூலமானது, மேன்முக மெய்தாமல் தலைகீழாக ஆக்கு மியற்கையைத் தனதாய்க் கொண்டது மூளையாகையால் வசிட்டர் திரிசங்குவை நீசனுகச் சபித்தவரென்றும் , வெண்ணிறம் பொருந்தி யசைவற்று நிலைகொண்ட நோக்கமுறுங் "கொக்"கென நிற்கும் இயற்கையுடையது மூளையாகையால் கொக் குருவாக விசுவாமித்தரனல் இருந்தவரென்றும், "மன்" என்னும் ஆன்மா ஏழ்வகைத் தோற்றத்தை யடையும் போது அடையும் தீங்காகிய அந்தரங்கள் ஏழுடன் ஆன்மா எய்யா தனை சரீரம் அடையும் அந்தரங்களேழும், ஆகிய பதினுன்கு மன் வந்தரங்களில் ஒன்ருகிய வைவச்சுத மன்வந்தரம் என்னும் யமவாதனைத் தீங்கை எதிர் நோக்கி நிற்கும் பருவத்தில் அமைந்து விளங்கும் தன்மையுடையதாக இப்பொழுது இருப்பதால் வசிட்டர் வைவச்சுத மந்திர காலத்தில் இருப்பவர் என்றும் கூறப்பெறுகிறது, ஈண்டு கூறப் பெற்ற வசிட்ட ருசி அத்தியாயமானது உலகமக்களுக்குத் தெய்வீகக் கலைகளை வாரிவழங்கிய முனிவர் பிரானின் நினைவு என்றென்றைக்கும் இனியனவாகக் காக்கப் படுமாறு செய்ய வேண்டியமைத்துக் கூறப் பெற்ற காக்க பாடினியக் கலையாமென அறிக.

Koviloor Digital Library

உ

சிவமயம்

விசுவாமித்திர ரிஷி விளக்கம்

விசுவாமித்திர ருசி அத்தியாயம்

விசுவாமித்திர ருசியும் உலகினருக்குச் சிவகலையாக மாதிகலை யருளியவரே யாகையால் அவருடைய நாமமும் காக்கப்படும் இனியவற்றுளொன்றெனக் கருதி யாக்கைக்கு ஆக்கந்தரா நிற்கும் செயற்ப் பாட்டைக் கொண்ட ஆமாசயத்திற்குச் சரி இயைபுள்ள சரியையாக வமைத்துக் கூறிய விவரம் காட்டுகிறோம் காண்க. விச்சு உவம் என்னும் (இரண்டாவதாகிய) நிலையை யடையும் போது தோன்றாத தாய தன்மையே போல சுக்கிலத்தா லெடுத்த தூலமாகிய இந்த உடம்பாம் விச்சுவத்திற்கு மித்திரமாய் நின்று ஆக்கந் தருவது இரைப்பையாகிய ஆமாசயமே யாகையால் உலகினுக்கே நண்பனெனக் கருதப்பெறற தன்மை வாய்ந்த விசுவாமித்திரரை ஆமாசயமாகக் கூறப்பெற்றது. அந்த ஆமாசயம் உதராக்கினியால் எப்பொழுதும் வெம்மை மாறுமலிருக்கும் இயல்புடைமையால் அவர் எப்பொழுதும் கோப முடையவராக இருந்தாரென்று கூறப் பெறுகிறது. ஆமாசய நிலையத் தானமாகிய பிண்டத்திலுள்ள கருவிகளெல்லாம் வசியீட்டத் தாதுவாகிய மூளையிடங் கொண்டுள்ள அண்டத்திலுள்ள கருவிகளுக்கு எதிர்மாறுக-வுள்ளமையால் வசிட்டருக்கு இவர் என்றும் எதிர்மாறுபாடு

Koviloor Digital Library

கொண்டுள்ளவர் என்றும், ஆமாசயத் தொடராயுள்ள கீழ்மூலமானது மேன்முகமெய்தியுள்ள காலத்து அதைக்கீழ் முகமாகும் வண்ணம் வசியீட்டத்தாது நிலையப் போக்கு ஏற்படலாய காரணத்தால், மூலங் கீழ்முக மெய்துவதை வசிட்டருடன் மாறு கொண்டு இவர் சிருட்டி செய்த சுவர்க்கம் அந்தர சுவர்க்கமாய்த் தலைகீழாக வாயது என்றும், இவர் சிருட்டியிற் றோன்றியனயாவையும் நீச்சத் தன்மை யுடையன வாயிற் றென்றும், உடம்பின் தட்பவெட்ப மிகுதிப்பாடு, இரைப்பையாம் ஆமாசயத் தொழிலைக் கட்டுப்படுத்தும் ஆகையால் மேனகையால் இவர் பங்கப் படுத்தப் பட்டாரென்றும், வடிவத்தாலும், தன்மையாலும், செயலாலும் ஆமையை ஒத்துள்ளதாக ஆமாசய மிருப்பதால் இவர் ஆமையுருப்பெற்றுக் கொக்குருக் கொண்ட வசிட்டருடன் மாறுபட்டிருந்தாரென்றும் கூறப் பெறுகிறது. இவை விச்சுவா மித்திர நாமங் காக்கப்படும் இனிய கலையின் தெளி வென்றுணர்க.

Koviloor Digital Library

உ

சிவமயம்

கலைக்கோட்டு மாமுனிவர் விளக்கம்

கலைக்கோட்டு மாமுனிவர் அத்தியாயம்

கலைக்கோட்டு மாமுனிவர் சரித்திரம் காக்கப்படும் இனியனவான கலையாயமைந்துள்ள விளக்கம் காட்டுகிறோம் காண்க.

அண்டமென்பது சிரம். வைபவம் (விபவம்) என்பன ஆக்கம். ஆகவே சிரம் ஆக்கமாக உறுதி நிலையை யடையும் பருவத்தையே விபாண்டகர் என்றும், அந்த பருவமே பல்தோன்றுதற்குரியதாகையால் விபாண்டகர் மைந்தர் கலைக்கோட்டாரென்றும் கூறப்பெற்றது.

இந்தச் சரியைக் கிலக்கியமாய் நின்ற கலைக்கோட்டு முனிவர் சூரியன் துலா ராசியில் விசாக நட்சத்திரத்தில் நின்று பரணி நட்சத்திரத்தில் நின்ற சந்திரனை நோக்க, பூர நட்சத்திரத்தில் சேயுதிக்க மகர ராசிக்கதிபனான சனி பூராட நட்சத்திரத்தில் அமைய மகரலக்கனத்தில் பிறந்தவர் என்பதையே விபாண்டர் நீராடச் செல்லுமிடத்து ஊர்வசியைக்கண்டு மோகமுற்று வீரியத்தை நழுவவிட, அது அக்குளத்துள் விழ, அக்குளத்துள் நீரருந்த வந்த மான் நீருடன் அதை அருந்திக் கருக்கொள்ளப் பிறந்தவரென்று கூறப் பெறுகிறது. எவ்வாறெனின் வைபவ அண்டன் சூரியன்

Koviloor Digital Library

பரணி மீன் தாசி பரணிச் சந்திரன் வானவருலகக் கணிகையாம் ஊர்வசி. அதைச் சூரியன் நோக்குதல் வைபவ அண்டன் ஊர்வசியைக் கண்ணுற்றது அவள் விலகியேக இவன் வீரியத்தைக் குளத்துள் நழுவவிட்டது. பரணி மீனின் நின்ற சந்திரன் விலகிச் செல்ல அந்தப் பரணி மீனின் திரிகோண நட்சத்திரத்தில் ஒன்ருகிய உட்குள மென்னும் பூராட நட்சத்திரத்தில் இலக்கிஞதிபனுய் உள்ள சனி நின்றது. இப்படி நிற்க மகர ராசியை லக்கினமாய்க் கொண்டு பிறந்ததே, மான் அதை நீருடன் அருந்திக் கருக் கொண்டீன்றது என்றுணர்க இதில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இவர்களின் நிலை மட்டும் தானே தெரிகிறது. மற்ற கோள் நிலைகளைப் பற்றிச் சொல்லவில்லையே என்று எண்ண வேண்டாம். தெய்வமாம் இசைவு பெற்றுத் தோன்றுபவர்-களுக்கெல்லாம் நான்குகோள்கள் பலம் பெற்றிருக்கும் என்பது பொது விதியாகையால் அதன்படி புதன், சுக்கிரன், வியாழன், இராகு முதலிய கோள்களை அவரவர்கள் மூலத்திரிகோண முறையே நிறுத்திப் பார்க்க கன்னியில் புதன், துலாத்தில் சுக்கிரன், தனுசில் வியாழன், கும்பத்தில் இராகு, சிம்மத்தில் கேதுவாக அமைவன காணலாம். இது கலைஞர்கள் எளிதில் உணருந் தன்மைத் தாகையால், இதைச் சொல்ல வேண்டியதில்லையாயிற்று இதை முறையே முழுவிவரமாகக் காட்டுகின்ருேம். இலக்கினம் மகரம். இரண்டில் ராகு; நாலில் சந்திரன், எட்டில் செவ்வாய் கேது, ஒன்பதில் புதன், பத்தில் சூரியன் சுக்கிரன், பன்இரண்டில்

Koviloor Digital Library

வியாழன் சனி இதிற்காணும் சிறப்பியல் என்னவென்ருல் மழைவளம் பெருக உண்டாவதைக் காட்டுவதாக சூரியன் ராசிசஞ்சாரத்தாலோ கோட்களின் சேர்க்கையாலோ வீரியங் குன்றி நிற்குங்கால் அவனுடைய பார்வை பெற்ற திரிகோண நட்சத்திரத்தில் சந்திரன் நிற்க, அந்த நட்சத்திரம் மழைக்கோளாகிய சுக்கிரனுடைய நட்சத்திரமாக, சுக்கிரனும் பலம்பெற மழைவளப்பெருக்க முண்டாகும். இதில் அவ்வாருன அமைப்புப் பெற்றுள்ள தோடமையாமல் சலநிதித் தானமாகிய கன்னியில் ஐம்பூதங்களில் அப்புகிரகமாகிய புதனும், நீர்நிலைத்தேக்க ராசி யாகிய கும்பராசியில் அவ்விராசிக் கதிபனுகிய இராகுவும், குளத்திற்குரிய நட்சத்திரமாகையால் உடைக்குளமென்றே பெயர்பெற்ற பூராட நட்சத்திரத்தில், நீரேறி நிற்கும் நிலையாகிய ராசியாம் மகரத்திற்கதிபனுகிய சனியும், நிற்பது மழை வளச் சிறப்புக்கள் எத்தனை யுண்டோ அத்தனையுமே பொருந்தவுள்ளதைக் காட்டுவனவாகவுள்ளன. இந்த கோள் நிலை நுணுக்கத்தை யுணர்பவர்கள் மழைநாட்குறிப்பைத் தெளிந்து சொல்பவர்களாதல் மிக எளிது. இவ்வுலக வாழ்க்கைக்கு முதன்மையானது முதன்மைத்தாயது செல்வம். அஃது நீரின் வலிமையால் விளங்குவது. "நிதியின் பெருவலி நீர்வலி தானே" என்பது ஆகம மொழி. ஆகவே, நீர்வலிவை யுணர்த்தும் கோள் நிலை காக்கப்படும் இனியதாக இவை யுரைக்கப் பெற்றது. இதன் நுணுக்கத்தை யுணர்ந்து பயன்பெறுக.

Koviloor Digital Library

அகத்தியமாமுனிவர் அத்தியாயம்

அகத்தியர் சிவகலையாகமாதி நூற்கள் அருளிச் செய்த முனிவர்களுள் முதன்மையானவர் ஆகையால் அவருடைய நாமங்காக்கப் படு மினியவற்றுள் ஒன்றுந் தகுதி வாய்ந்ததெனக் கருதி மூலாக்கினியை வளரச் செய்யும் சமான னென்னும் வாயுவினுக்கு அதன்பெயரையமைத் துள்ளார்கள். அதனை ஒரு அத்துக்குட்படுத்தி முன்பு கூறினோம். அத்தியை யாயத்தை விரிவாக நாம்செய்துள்ள அகத்தியருண்மை நாடித் தொகை விளக்கத்திற் கூறியுள்ளோம். ஆயினும் அதன் நுணுக்கத்தையும், காக்கப்படும் இனிய கலையையும் ஈண்டுக் கூறுவோம் காண்க.

சிவஞானுநுபூதி சாதன விளைவில் கபால வரையினின்று மூலத்திற் சார்பு கொண்டு சமான வாயுக் கதியால் மூலாக்கினியை எழுப்பி எழுந்துள்ள நிலையில் நின்ற பருவத்திற் பூரணத்தை யடைந்தவர் யாரேயாயினும் அவர் அகத்தியரேயாம். இதற்குப் பதமுத்தி யென்று பெயர். ஒரு பதவியை யேற்கும் தகுதியாளராம் ஒருவர், அப்பதவியை யடைந்த பின்னர் அவர் இயற்பெயர் மாறி பதவியின்பெயரே வழங்குதல் போல அப்பதத்தினை அடைந்தவர்க் கெல்லாம் அகத்தியர் என்ற பெயரே வழங்கும் எனவறிக. இவ்விலக்கண வமைதியின்றிப் பெரியோர்கள் கூறமாட்டார்கள். அப்படியேதேனும் உளதாயின் அது தள்ளற்

Koviloor Digital Library

பாலதாம். இந்தச் சரியைக் கிலக்கியமாய் நின்ற அகத்திய மாமுனிவர் சதய நட்சத்திரத்தில் கும்ப ராசியை இலக்கினமாய் கொண்டு பிறந்தவர். இலக்கனத்திற் கேதுவும் ஏழில் மற்ற கோள்களெல்லாம் அமைந்துள்ளன. இதைக் குறித்தே தான்மேரு கிரியில் பார்வதி பரமேச்சுரன் திருக்கல்யாணம் நடைபெற்றது. அங்கு எல்லா உலகத்தவர்களும் ஒன்று கூடினுர்கள் அதனுல் வடதிசை தாழ்ந்தது. தென் திசை உயர்ந்தது அதைச் சமானம் செய்ய அங்குட்ட முனிவரால் அகத்தியரை இறைவன் தென்திசைக் கனுப்பிவைத்தார். அதன்படி தென்பொதிகை வரையின் அமைந்தார். கல்யாணக் காட்சியை இருக்குமிடத்திலிருந்தே காணும் பேறு பெற்றுர். கும்பத்திற் ருேன்றிய வதனுல் கும்பமுநி என்னும் பெயர் வந்தது. அங்குட்ட வடிவின் அளவினராக இருந்தமையால் குறுமுனிவர் என்னும் பெயர் பெற்றுர். கடல் நீரை அங்கையில் அடக்கி யுண்டார் என்றெல்லாம் கூறப்பெறுகிறது. மேருவாகிய மலை சிம்மராசி. அதில் பார்வதி பரமேச்சுரன் திருமணம் நடைபெறல் சிம்ம ராசியில் சூரியன் சந்திரன் ஒன்று கூடல். அப்பொழுது அவ்விடம் எல்லா உலகத்தவர்களும் ஒன்று கூடல். கோள்களெல்லாம் அதே ராசியில் கூடி நிற்றல். அப்பொழுது வடதிசை தாழ்ந்து தென்திசை உயரல். சிம்மராசியில் உள்ள ராகுவிற்கு ஏழில் கேது நிற்றல் அங்குட்ட அளவிளான குறு முனிவரை இறைவன் தென்றிசைக் கனுப்பி வைத்தல். அங்கையென்னும் அத்த மீனிற்கு மேற்பாதத்தில் அங்கை

Koviloor Digital Library

அட்டமாம் அங்குட்ட மென்னும் இரண்டுள்ளங்கையைச் சார்ந்து எட்டுவிரல் கானெனவுள்ள நட்சத்திர பாதம் எட்டாம். மகம் ௧,௨,௩ பூரம் ௧,௨,௩,௪ உத்திரம் ௧ ஆகிய எட்டிலும் முறையே சூரியன் சந்திரன், புதன், ராகு, சனி, சுக்கிரன், செவ்வாய், வியாழன் ஆகிய எட்டுக்கோள்களும் நிற்கத் தோன்றுதல் அங்குட்ட முனிவராய் ஆதல் எல்லாக்கோள்களும் சிம்மராசியிற் குறுகி நிற்க கும்பராசியிற் சதயமீனை இலக்கினமாய்க் கொண்டு தோன்றல். குறு முனிவராய்க் கும்பத்தோன்றிய கும்ப முனிவர் எனப் பெறல். குன்றென்னும் சதய மீனை இலக்கினமாய்க் கொள்ளல். பொதிகை வரையின் அமைதல். பொதிகை வரையின் அமைந்ததும் பூமி சமநிலையாதல் எட்டுக் கோள்களினும், வலியதாகிய பாம்பு அதனியற்கைப்படி தன்னிடத்தினின்றும் கீழிறக்கங் கொள்ளல். குன்ற மென்னு சதய மீனினின்று சூரிய சந்திரர்கள் ஒன்று கூடுமிடத்தை ஏழாம் பார்வையாகப் பார்த்தல் பொதிகையிலிருந்து கல்யாணக் கோலத்தைத் தரிசித்தல் கைத்தலம் மென்னும் அத்த நட்சத்திர ராசிக்குமேல் எட்டுக் கோள்களும் குறுகி நிற்றல் - எட்டுக் கடல்களும் உள்ளங்கையில் அடங்கும்படி செய்தல். இந்தக் கோள் நிலைக் குறிப்பு மலையருவி நீத்தம், முகின்மழை நீத்தம், கடலலை நீத்தம், நிலச் சதுப்பு நீத்தம் ஆகிய நீத்தப் பெருக்க உற்பாதங்களையெல்லாம் நீக்க வல்ல தன்மையை விளக்கி மக்கட்கு நலம்பயப் பன வாகையால் இது காக்கப்படு மினியனவாக வமைத்துக் கூறப்பெற்றதென வுணர்க.

Koviloor Digital Library

துருவாச முனிவர் அத்தியாயம்

துருவாச மாமுனிவர் ஆத்திரம் அசூயை யற்ற பெரியோர்கள் பாற்குற்ற மிழைக்கும் கொடியோர்களைச் சபித்து ஒழிக்கும் மார்க்கங் கூறி அறம் வளர்த்தவராகையால் அவர் நாமங்காக்கப்படும் இனியவற்றுள் ஒன்ருகக் கருதி உடலுறுப்புகளில் மலாசயத்திற்கு அவர்பெயரைச் சரியையா யியைபு செய்துள்ளார்கள் என்பதை முன்பு கூறினேம். அவ்வத்தின் இயையும் ஆயமாம் அத்தியாயத்தையும் விளக்குகிறேம் காண்க.

திரிபுரம் எரியச் சிரித்த சிவபெருமானுடைய கோபக் கனலிற் றேன்றிய குழந்தை ஆத்திரைய மாரிஷியின் மகவாய் அநுசூயையயிடம் உதிக்க இறைவன் அருள் செய்ய அவ்வாறு தித்துத் தவசியானவரே துருவாசர். சுவாலிக்குங் கனற் கொழுந்தென கடுங்கோபம் உடையவர். தவறிழைத்தவர் யாவரே யாயினும் சபிக்கும் ஆற்றல் உடையவர் என்று கூறப் பெறுகிறது. இரும்பு மதிலாய் விண்ணிலியங்குஞ் சனியும், வெள்ளி மதிலாய் விண்ணி லியங்குஞ் சுக்கிரனும், பொன்மதிலாய் விண்ணிலியங்கும் சந்திரனும், ஆகிய முப்புரங்களும் எரி பிறந்து அங்கி படர்ந்து செந்தழலாய் வெந்து விழும் படி ஆர்த்து நகைத்து முறுவல் கொள்ளலெனக் கார்த்திகை, அத்தம், கேட்டை ஆகிய மீன்களில் முறையே நிற்க, ஈசனின் நாளாகிய திருவாதிரை மீனை இலக்கினமாகக் கொண்டு பிறந்தமையால் திரிபுரம்

Koviloor Digital Library

எரியச் சிரித்த சிவபெருமானுடைய கோபக் கனலிற் றோன்றியவர் என்றும், எல்லாக் கோள்களினிடத்தும் அசூயையின்றி அனசூயை என்னும் நட்பாய் நிற்கும் புதன் மாதுருத்தானமாகிய நாலாமிடத்தில் நிற்பதைக் குறிக்க அனசூயையின் மைந்தன் என்றும், சூரியன் பிதுருத்தானமாகிய ஐந்தின் நிற்பதைக் குறிக்க ஆத்திரேயரைப் பிதாவாகக் கொண்டவர் என்றும், செவ்வாய் லக்கினத்தில் நிற்பதைக் குறிக்கவே கடுங்கோபமுடைய வரென்றும், தாழ்ந்து நிமிருந் தன்மைப் பொருத்தத்தாற் சாபமென்னும் பெயரையுடைய தனுசுக்குரியவனை வியாழன் அதிலேயே நிற்பதால் சாபமிடும் வலிமையுடையவர் என்றும், தூரு வாச மாகிய கிணறென்னும் விருச்சிக ராசியில் இருசு என எதிர் எதிர் நிற்கும் இராகு நிற்பதைக் குறிக்கவே துருவாச மகாரிசி என்றுங் கூறப் பெற்றதென உணர்க. எரிபிறந்திடு நாள் என்றும், அங்கி நாள் என்றும், செந்தழல் நாள் என்றும் முறையே கார்த்திகை, அத்தம், கேட்டை ஆகிய மீன்கள் பெயர்பெறும், அதில் முறையே சனி, சுக்கிரன், சந்திரன் நிற்க அவைகளுக்கு நீச்சத் தன்மை ஏற்படும். மேலும் அந்த நாண் மீன்களுக்குக் குரிய எழுத்தொலி ஆர்ப்பு, நகைப்பு, முறுவல் என்னும் மூவகைப்பட்ட சிரிப்பொலியைக் குறிக்குந் தன்மையுடையன என்பனவற்றை நோக்கி முன் கூறிய தூரு வாசர் சரியையைக் காண்க. இது நீச்சத்தை நீச்சம் பெற்ற கோள்நோக்கலால் ஏற்படும் விளைவின் பயனைக்

Koviloor Digital Library

காட்டவும், தீச்சொற் பலிதமுறுங் கோள்நிலையைக் காட்டவும் ஏற்பட்ட காக்கப்படும் இனியனவாம். இதை நுணுகி யுணர்பவர்கள் சபித்தல் செய்யும் கலைநுணுக்க வல்லவராகலாம் என்றுணர்க.

கோதம ருசி அத்தியாயம்

கோ உத்தமர் என்னும் கோதமர் நிமித்த நூல் வகுத்தருளிய நிமிந்த நூல்கலா வல்லவராகையால் அவருடைய நாமமும் காக்கப்படும் இனியவற்றுள் ஒன்ருக ஆக்கப்பெற்று ஐந்து ஆசயங்களில் ஒன்ருன சலாசயத்திற்குச் சரியியையபாஞ் சரியையயாக வகுக்கப் பெற்றுள்ளது. அதனியலை முன்பு காட்டினேம். அது ஒரு அத்துக் குட் படுத்திக் கூறப்பெற்ற தாகையால் அவ்வத்தினியைந்த ஆயமாம் அத்தியாயத்தை ஈண்டுக் கூறுகிருேம் காண்க.

அச்வதி இரண்டில் சுக்கிரன் நிற்க, பரணி இரண்டில் புதனிற்க, கார்த்திகை இரண்டில் சூரியன் நிற்க, கார்த்திகை இரண்டாம் பாதமே சென்ம லக்கினமாக வமைய அதிற் சந்திரனும் நிற்க ஏழாமிடமாகிய வெருள் செய்யும் இராசியில் கேட்டை இரண்டில் செவ்வாய் நிற்க தனுசில் வியாழனும் மகரத்திற் சனியும் மீனத்திற் கேதுவும் கன்னியில் இராகுவும் நிற்கப் பிறந்த மையைக் குறிக்கவே இவரைக் கோதமர் என்றும் அகலியையை மணந்தார் என்றும் அகலியையை இந்திரன் பொய்யுருக் கொண்டு புணர்ந்தா னென்றும், அஃதறிந்த கோதமருசி அவனுடம் பெல்லாம் ஆயிரம்

Koviloor Digital Library

நிதம்பக் குறிகள் தோன்றும்படி சபித்தார் என்றும் அதனுற் கூசி தண்டளிரிலையில் மறைந்துள்ள இந்திரனுக்காகத் தேவர்கள் வேண்ட அது அவனுக்கவ்வாறே யாயினும் மற்றையோர்களுக்கு ஆயிரங் கண்களெனத் தோன்றுமாறு சாப நீக்கம் செய்தாரென்றும், அகலியையானவள் கற்பாறையாகக் கிடந்து மிதுலை வழிச் செல்லும் இராமனுடைய பாதச் சுவடுபடலால் மீண்டும் பெண்ணுகு மாறு சாபமும், சாப நீக்கமும் செய்தா ரென்றும் கூறப்பெறுகிறது. எவ்வாறெனின், கோ உத்தமர் என்னும் மொழியே கோதமர் என்று ஆகியிருக்கிறது. கோ என்பது இடபம், "உ" என்பது இரண்டு. இரண்டில் ஒன்ருகத் தானுங் கூடி விடாமல். இரண்டின் முன்னிலைப் பாட்டில் தான்மிக்கவனுய்த் தமித்து நிற்பவனே உத்தமன் என்று கூறப்பெறுவான். ஆகவே, இடபத்தில் சூரியனும் சந்திரனும் நிற்க, அதை இலக்கினமாகக் கொண்டு பிறந்தமையாலும், "கோ" என்னும் பசுவாகிய புதன் பாசமாகிய சுக்கிரனை நீங்கிப் பதியாகிய சூரியனை அணுகலாகிய கோ உத்தம இயலைப் பெறும் முறைப்படி அச்வதி இரண்டில், பரணி இரண்டில் கார்த்திகை இரண்டில் முறையே சுக்கிரன், புதன், சூரியன் நிற்கத் தோன்றி யமையாலும் கோதமர் எனப் பெற்ருர். கோதமர் என்னும் பெயர்க் காரணம் பற்றி நான்கு கோள்நிலையை மட்டும் அறிந்து கொண்டோம். மேலும் உள்ள கோள் நிலைக் குறிப்பை எவ்வாறுணர்த்தி-யுள்ளார்கள் என்பதையும் காட்டுகிறேம். செவ்வாய் ஏழில்

Koviloor Digital Library

நிற்பதைக் குறிக்கவே அகலியையை மனைவியாகக் கொண்டார் என்று கூறப்பெறுகிறது. கலி என்றால் சநி. அகலி யென்றால் சநிக்கு எதிர்மறையாகிய கோள் என்பதைக் குறிக்கும். சநிக்கு எதிர்மறையாய கோள் செவ்வாயேயாம். செவ்வாயின் மூலத்திரி கோண ராசியாகிய மேடத்திற் சநி சார்ந்தால் நீச்சத் தன்மையடைகிறது. அதே செவ்வாய் சநியின் வீடாகிய மகரத்திற் சார்ந்தால் உச்சம் பெறுகிறது. ஆகையால் கலிக்கு எதிர்மாறுந் தன்மை பெற்ற அகலி இயையுடையது செவ்வாயே ஆகிறது. அகலியையான செவ்வாய் ஏழாமிடமாகிய களத்திரத் தானத்தில் நிற்பதாலேயே அகலியையைக் கோதமர் மனைவியாகக் கொண்டார் என்றும், அந்தச் செவ்வாய் இந்திரன் என்னும் பெயர்த்தன்மை பெற்ற கேட்டை மீனில் நிற்பதால் இந்திரன் அவனைக் கூடினனென்றும், செந்தழலெரியின் தன்மை வாய்ந்த அந்த மீன் எரிபிறந்திடு நாளாகிய கார்த்திகையிற் சூரியன் நிற்க இலக்கினங் கொண்டமைந்த கோதமரைப் போல சூரியனுடைய பார்வையைப் பெற்று நிற்பதால் கோதமரைப் போல இந்திரன் பொய்யுருக் கொண்டான் என்றும், செந்தழல் எரியாகிய கேட்டை மீனில் நிற்கும் செவ்வாயை அக்கினி நாண் மீனாகிய கார்த்திகையில் நிற்கும், ஆயிரங் கதிரோனாகிய சூரியன் நோக்குங் காலம், இந்திரன் என்னும் பரிசவுணர்ச்சித் தாது துவக்காகிய ஆனந்த மய கோசம் எங்ஙனும் இரத்தமும் நீருங்கசியும் துளையும் பெண் தெய்வக் குறியென்றும் சொல்லப் பெறுவதுமாகிய வைசூரிக்

Koviloor Digital Library

கொப்புளந் தோன்றும். இயற்கையே ஆயிரம் நிதம்பக் குறிகள் தோன்றும்படியாய் இந்திரனைச் சபித்தார் என்றும் வைசூரிக் கொப்புளங்கள் எல்லாம் அயலார் பார்ப்பதற்கு அழகாய்க் கண்களைப் போலிருந்தாலும் அதையுடையோருக்கு அது இரத்தமும் நீரும் கசியும் துளையாகவே இருப்பதால் இந்திரனுக்கு அது பெண்குறியாகவே தான் தோற்றமளிக்குமென்றும் வைசூரிக் கொப்புளங் கொண்டோர்கள் அவ்வெம்மைக் காற்றுமல் தண்டளிரிலையை யிடமாகக் கொள்ளுமியற்கையையே இந்திரன் வெட்கி இலையகத்து மறைந்தானென்றும். சந்திரா லக்கினத்திற்கு ஏழிலும் சென்ம லக்கினத்திற்கு ஏழிலும் சுக்கிர லக்கினத்திற்கு எட்டிலும் செவ்வாய் நின்ற செவ்வாய் தோஷங் காரணமாகக் களத்திரம் வாய்க்காமல் போம் தன்மையையே அகலியைக் கல்லாய் போம்படி சபித்தாரென்றும் துலையின் மிக்கதாகிய மிதுலையென்னும் துலாராசிக்கேகும் குருவாகிய இராமன் கல்லென்னும் சிம்மராசியிற் பிரவேசிக்கும் காலம் குற்றமற்ற மனைவி வாய்ப்பதைக் குறிக்கவே இராமன் மிதுலைபோம் வழியிற் கல்லாய்க் கிடந்த அகலியையின் சாபம் நீங்கப் பெற்றது என்றும் சொல்லப் பெறுகிறது. தூலமாகவும், சூக்குமமாகவும், கோதமப் பெயர்க் காரணத்தை விவரித்து இதுவரையுள்ள கோணிலையைச் சொன்னேம். இதே போல் காரணமாகவும் கோதமப் பெயர்க் காரணத்தைப் பார்க்க கோள்நிலை யொன்பதின் அமைவு தோன்றுதலையும்

Koviloor Digital Library

காட்டுவோம். "கோ" என்பது கண் கண்ணிரண்டுங் கூடி ஒன்றை நோக்குவதே கோவிற்கு உத்தமமாங் கோதமம். கோவாகிய கண்ணிற்கு நோக்கும் தன்மையில்லையேல் பயனில்லாதாகி விடும். ஆகையால், அவ்வாறுகாமல் எல்லா ராசிகளிலும் பார்வையுடையதாகக் கோணிலை யமைத்துப் பார்க்கும் போது ஐந்தில் இராகு, எட்டில் வியாழன், ஒன்பதிற் சனி பதினொன்றில் கேதுவாக வமையும். கோதமன் என்ற பெயரைத் தூல, சூக்கும, காரணமாக வமைத்தும், சரித்திரக் கூற்றை வைத்தும் பார்க்கும் போது கோணிலை முழுதும் அமைந்து விடுகிறது. இதை நுணுகி யாராயின், கோணிலைப் பயனுணர் ஆற்றலும் நிமித்திக நூலுணர்வுத் தெளிவும் தெள்ளெனத் தோன்றும். இப்பொழுது கூறிய கோணிலையை வரிசைப்படுத்தியுங் காட்டுகிறோம். இலக்கனம் கார்த்திகை இரண்டில் இடபம். சூரியன், சந்திரன் இருவரும் கார்த்திகை இரண்டில் (இடப ராசியில்) இராகு ஐந்தில் ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் (கேட்டை இரண்டில்) செவ்வாய் எட்டில், வியாழன் ஒன்பதில், சனி பதினொன்றில், கேது பன்னிரண்டில் (அச்வதி இரண்டில்) சுக்கிரன், பரணி இரண்டில் புதன் இவ்வாறு பார்க்கும் போது இலக்கினவமைதி கோதம தூலம், சுக்கிரன், புதன், சூரியன் நிற்கும் நட்சத்திர பாதவமைதி கோதம சூக்குமம். ஏழாமிடச் செவ்வாய் அமைதி கோதம சரித்திர நுணுக்கம். இராகு, வியாழன், சனி, கேதுவமைதி கோதம காரணம். இவ்வாருக அமைந்துள்ளதைக் காணும் பயன்கருதிக்

Koviloor Digital Library

காக்கப்படுமினியன வாயமைத்த காக்கபாடினிய விளக்கத்தை யோர்ந்துணர்ந்து பயன்பெறுக.

இவ்வத்தியாயத் தொகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் கூறப்பெற்ற வசிட்ட விசுவாமித்திர முனிவர்களின் அத்தியாயம் யோகாந்தச் சிவரகசியச் சரியையாக மட்டும் கூறியதை மேலும் விரித்துக் காக்கப்படும் இனிய கலைவிளக்கமாக வுள்ளதையுங் காட்டுகிறோம் காண்க.

உத்திராடம் ஒன்றில் சூரியன் அதுவே லக்கினம். அதில் வியாழன், நாலிற் சனி, ஏழிற் செவ்வாய் ராகு, பத்தாமிடம் சித்திரை நட்சத்திரத்தில் சந்திரன், பன்னிரண்டாமிடம் கேட்டை நட்சத்திரத்தில் புதன் தனுசில் மூலநட்சத்திரத்தில் கேது, பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் இவ்வாறு நவக்கோள் நிலைமையைப் பொருந்தித் தோன்றியமையைக் குறிக்கவே இவருடைய பெயரை விசுவாமித்திர முனிவர் என்றும் நான்கு திக்கினும் சென்று தவம் செய்தவர் என்றும், முதற்றிக்கில் திலோத்தமையாளாற்றவம் பங்கப்பட, அவளைப் பூலோக மாதாய்ப் பிறக்கும்படி சபித்து மறுதிக்கிற் றவஞ்செய்யுங் காலையில் குருவின் கோபத்திற்காளாய் நீச்சத் தன்மை யடைந்த திரிசங்கினைச் சுவர்க்கம் புகச் செய்து தடைப்பட்ட காலையில் தன் தவ வலிமையால் அந்தர சுவர்க்கத்தின் நிற்கச் செய்து அதனால் தன் தவவலிமை குன்றியவராய் மறுதிக்கிற்

Koviloor Digital Library

சென்று தவம் குற்றிய காஜலயில் அம்பரீடனின் நாமேதத்திற்கு யாகப் பசுவாய்ச் சென்றவனின் வேண்டுகோளுக்கிரங்கி தனது தவ வலிமையால் மந்திரசித் தீந்து உயிர்ப்பயம் நீக்கி ரட்சித்து மறுதிக்கிற் சென்று தவஞ் செய்து முத்தேவரும் புகழுப் பிரமரிஷியாயினுர் என்றும், வசிட்டரைக் கொக்காகும்படிச் சபித்தார் என்றும் அவரிடம் உள்ள தெய்வப் பசுவை வேண்டிப் போரிட்டுத் தோற்ருர் என்றும் வசிட்டரைப் பகைவனுகவே கருதினுர் என்றும் கூறப் பெறுகிறது. எவ்வாறெனின் விச்சுவ நாள் என்பது உத்திராட மீன், மித்திரன் என்பது சூரியன். உத்திராட மீனிற் சூரியன் நின்றமையால் விச்சுவமித்திரன் என்றும், உத்திராடம் முதற்காலில் நின்றமையைக் குறிக்கவே காதி மைந்தன் என்றும் (க. என்பது ஒன்று அதை ஆதியாகக் கொண்டதே காதியாம்) தவப்பேறளிக்கும் கோள் வியாழன். அது லக்கின மீனில் நின்றமையால் விசுவாமித்திர முனிவர் என்றும், நாலாமிடமாகிய மீனத்தில் சனி நின்றதஜனயே திலம் ஒத்த மெய்யாளாம் திலோத்துமையாள் என்றும், அவளால் தவம் பங்கப்பட்தென்றும், திலம் ஒத்த மெய்யையுடையவனுன சநி நின்ற ராசி பெண்ராசி ஆகையால் திலோத்தமையாள் எனப் பெற்றது. சநி அவ்விடத் தினின்று செல்லுமிடம் நிலமகனுன செவ்வாய் வீடாகவும் அவ்வீடு சநி நீச்சத் தானமாகையால் அவஜளப் பூலோகப் பெண்ணுகும் படி சபித்தார் என்றும் செவ்வாய் குரு உச்சம் பெறும் இடத்தில் நீச்சம் பெறுமாகையால் செவ்வாய் நீச்சத் தானத்தை நோக்கிச் செல்லும் மிதுனத்தில் நிற்பதைக்

Koviloor Digital Library

குறிக்கவே திரிசங்கு சண்டாளந் தன்மையெய்தி இவர் தவம் செய்யும் திக்கிற்கு வந்து சார்ந்தானென்றும் தவம் என்பது ஒருமைப்பாடு, இவருக்கு ஒன்று நாலு, ஏழு, பத்து ஆகிய நாலு திக்கிலும் சென்று தவஞ்செய்தார் என்றும் சங்கினைக் கண்டால் திரிபுறும் தன்மையுடையது சே யாகையால் செவ்வாயைத் திரிசங்கு என்றும், செவ்வாய் ராகுவுடன் கூடியதையே அந்தர சொர்க்கம் என்றும், இராகு மற்ற கோள்களுக்கு எதிர்த்திக்கிற் செல்லுந் தன்மையுடையதாகையால் அச்சுவர்க்கம் தலைகீழாகியது என்றும், அம்பரம் என்னும் ஆகாயத்தில் இடம்பெற்றுத் தலைமையாய் விளங்கும் சந்திரன் பத்தில் நிற்பதைக் குறிக்கவே மறுதிக்கிற்றவம் செய்யும் போது அம்பரீடன் வந்தானென்றும் அவ்வம்ப ரீசனாகிய சந்திரன் அடுத்தபடியாக நீச்சம் பெற்றும் பின்னர் கலையிழந்தும் போவதைக் குறிக்கவே அவன் நரபேதம் செய்யப் புக்கனன் என்றும், அம்பரீசன் நரமேதம் செய்தல் என்னும் நீச்சமும், கலையழிவும் எய்தினாலும் மீண்டும் கலை வளர்ச்சியும் உச்சமும் சஞ்சார கதியால் ஏற்படுமாகையால் அவனுடைய யாகப் பசுவாய் அவனுக்கு உயிர்ப் பயத்தை நீக்கினானென்றும், கௌசிகம் என்பது சித்திரை நட்சத்திரத்திற்குப் பெயராகையால் அதிற் சந்திரா லக்கினம் கொண்டு பிறந்தவர்க்குக் கௌசிகர் என்றும் ஞானகாரகனாகிய கேது மூலத்தின் நின்றதைக் குறிக்கவே வசிட்டரைக் கொக்காகும்படி சபித்தாரென்றும் (கொக்கு என்பது மூலம்) கேதுவிற்கும், சூரியனுக்கும் எப்போதும்

Koviloor Digital Library

பகையே யாகையால் வசிட்டருக்கும் இவருக்கும் எப்போதும் பகைமை இருந்து கொண்டே இருந்ததென்றும், நிருதித்த நாளாகிய பூராடத்திற் சுக்கிரனிருக்க அதை இவர் லக்கினமாய்க் கொண்டவர் என்பதைக் குறிக்கவே இவர் தன் பெயரால் நதியுண்டாம்படி செய்தாரென்றும், இந்திர நாளாகிய கேட்டை மீனிற் புதன் நின்றமையைக் குறிக்கவே இந்திரனுடைய பசுவாகிய காமதேனு என்னும் பசு தனக்கு வசப்படாமல் போயிற்றென்றும் கூறப் பெற்றதென்றுணர்க. இதில் கேந்திரத்தில் நிற்பதால் ஏற்படும் பயன் இன்னதென்றும், கேந்திரத்தானமென்னுங் கண்டங்களில் நிற்பினம் அடுத்து நீசமுள்ள தாயின் அதன் பயன் இன்னதென்றும், அப்படிக் கண்டங்களில் நின்ற கோட்கள் கெடினும், இலக்கினத்தில் நின்ற கோட்களும் அதன் தொடர்புள்ள கோள்களும் அதன் அதன் நட்சத்திரங்களில் நின்றுல் அதன் பயன் என்னவாம் என்பதையும் நடைமுறை நிகழ்ச்சியிற் காட்டியுணர்த்திய சரித்திரத்தை யுணர்த்திய காக்க பாடினீயம் இது. இதை நன்கு உணர்பவர்கள் "உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" எனக் கூறியவாறு இதில் உடுக்கை யென்னுங் கௌசிகத்தையும், அதை இழப்பதை நீக்கும் கையின் இயலையுங் காட்டும் கேந்திரமென்னும் கையின் தரமாம் கெடியையும் இத்தன்மைப் பேற்றுல் உலகிற்கே மித்திரனுக விளங்கும் விச்சுவாமித்திரத் தத்துவத்தையுங் காணலாம்.

Koviloor Digital Library

இதே போன்று வசிட்டருக்குப் பார்க்கும் போது இலக்கினம் மிதுனம், அதில் வியாழன், கேது, சுக்கிரன், சூரியன், நாலிற் சநி, ஏழிற் செவ்வாய், பன்னிரண்டிற் புதன் நின்றுள்ளன. இதைக் குறிப்பிடவே தான் இவரைப் பிரம்ம ருசி யென்றும், காமதேனுவென்னும் தெய்வப் பசுவையுடையவர் என்றும், விச்சுவாமித்திரனுற் பகைக்கப் பெற்றவர் என்றும்,தவமுதல்வர் என்றும், கற்பின் மேம்பட்டவளான அருந்ததியை மனைவியாகக் கொண்டவர் என்றும் கூறப் பெறுகிறது. எவ்வாறெனின் விச்சுவாமித்திரருக்கு எதிரியென்றும், பகைவர் என்றும் கூறப் பெற்றது அவருக்குள்ள கோள்நிலைக்கு ஏழாமிடத்தில் இவருடைய கோள்களெல்லாம் நிற்பதே எதிரியாயிருப்பதாம். அவ்வாறமைத்துப் பார்க்க மேற்காட்டியவாறு கோள்நிலையமைப்பு அமைவதைக் காணலாம்.

அதில் லக்கினுதிபதியாகிய புதன் ரோகிணி நட்சத்திரமாகிய பிரமனுளில் நின்றதால் பிரமருசியென்றும், அந்த ராசி கோ என்னும் இடபமாகையால் தெய்வப் பசுவை உடையவர் என்றும்

அங்கி மதிகூட வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகும் மதியொளி
அங்கி சிவத்தினிற் கூடவத்தா ரகை
தங்கி யதுவே சகலமுமாமே

Koviloor Digital Library

என்றபடி எல்லாமும் தாஞகி தாஞக வேறென்றும் ஆகாத இயல்புள்ள அழலோஞகிய செவ்வாய் களத்திரத் தானத்தினின்று உச்சத் தானத்தை எட்டுந் தன்மை பெற்றிருப்பதால் மனைவி அருந்ததியாம் கற்பரசியென்றும் கூறப் பெறுவதுடன் சித்தராக இருந்து உலகியல் வாழ்க்கையை நடத்தும் வாழ் சித்தத்துவம் பெற்றவராகையால் வசிட்ட மாமுனிவர் என்றும் கூறப்பெற்றதெனவுணர்க. இதை நன்குணர்பவர்கள் கோட்கள் கேடில் தானமாகிய ஒன்று, நாலு, ஏழு பத்தில் உச்சத்தை நோக்கி நெருங்கும் வண்ணம் நிற்கப் பெற்ருல் என்ன தன்மை வாய்க்கும் என்பதை யுணர்த்துவதற்காக வமைத்த காக்கப்படுமினியனவாம் இது என்பதையும், மெய்ஞான வாழ்க்கையும், ஞாஞசிரியத் தன்மையும் அடையும் வாய்ப்பைத் தரும் கோணிஇல எவ்வாருகிய தென்பன வாதியவற்றினையும் உணரலாம்.

இதில் முன்கூறியவாறு நிரையசை யாசிரியக் கட்டல் யாழ்ப் பியந்தை வஞ்சி யாப்பில் இசைந்துள்ள இராமாயண இலக்கியம் பூர்வகாண்டம் தோற்றப்படலம் நாத்திக வேதைதீர் சருக்கம் இராமகாதைச் சரியை யோகாந்தப் பரிச்சேதவுரையின் அத்தியாயத்தையுரைத்தோம். இவற்றுள் ஈன்ற அணிமைச் சமய இயஇல fiட்சிமச பனுவல்களால் விளக்கிஞேம். இதில் தன்திரம், பூ நிற்றல் ஆம் தசரதன் அறுபதிஞயிரம் ஆண்டுகள் அறுபதிஞயிரம் மஇனவியரோடுங் கூடி யிருந்தான். மகப்பேறு வாய்க்கவே

Koviloor Digital Library

இல்லையென்பது பூ நிற்காமற் பூத்துக் கொண்டே யிருந்ததையும் பின்னர் புத்திரர்க்காம் இட்டி செய்யப் புதல்வர் தோன்றினர் என்பது பூ நிற்றலையுங் குறிக்கும் இலம்பகமாய் தோன்றுவ காண்க. பூ நிற்கத் தோன்றிய குழவியும் அகவொளியால் தன்னகத்தே பூத்துக் கண்ட இயலை விட்டு நீங்கி அவன் திரம் என்றிருந்ததை மறந்து, தன் திரமே திறமாய் நின்ற இந்த ஈன்றணிமைச் சமயப் புனிற்றிளங் குழவிப் பருவத்தையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தில் அவர் இறைவனோடு ஒன்றிய வாழ்வுற்றவராய்ப் பூஞ்சோலையில் உலாவினாரென்றும், மகாபாரதத்தில் அம்பிகையின் பூஞ்சோலையிற் சென்று இளன் உலவினான் என்றும், மோசே (மோய்சேய்) எழுதிய விவிலிய நூலில் தேவனால் ஆக்கப்பெற்ற பூங்காவில் ஆதிமனிதனாகிய ஆதாம் உலவித் திரிந்தானென்றும், இதில் முதற்பொருளாகிய பிரமத்தோடு ஒன்றியிருந்த ஆன்மா, மனோவாயுக் கதியைச் சார்ந்து நால்வகையாய்த் திரிபுற்றதை முதற்பரம் பொருளே மனிதனாய்த் துணைவர்களுடன் தோன்றினாரென்று சொல்லுவதையே சுந்தரர் பூஞ்சோலையில் உலவுங்கால் அம்பிகைத் தோழியராகிய பெண்களால் இடருற்றுப் பூவுலகில் மனிதப் பிறப்பெய்தினா ரென்றும், மகாபாரதத்தில் இளன் இளையைக் கூடிப் பூவூர், உறு அவா முதலியோர்களால் அவர்கள் சந்ததி பூவுலகத்தவர்களினமாக ஆயிற்று என்றும், விவிலிய நூலில் பூங்காவில் உலவும் போது பாவபுண்ணியம் அறியும் மரம், நன்மை தீமை அறியும் மரம், சுகதுக்கம் அறியும் மரம் இவைகளைச் சார்ந்து

Koviloor Digital Library

தின்னக் கூடா தென்ற கனியைந் தின்று தேவனுடைய தொடர்பின் நீங்கி மனிதனுகின்றன் என்றும், நமது முதனூலின் பிடாக வுரையாகக் கூறப் பெறுகிறது என்றுணர்க இதை இந்த இடத்திற்கேற்ப விரித்துரைத்தோம், முழு விரியையும் வேண்டுமிடங்களில் விவரித்துரைப்போம் இது இகத்தின் எச்சமாய்த் தோன்று மியலைக் கூறிய இதிகாசமாகையால் குழவிப் பருவத்திலிருந்து கூறப் பெறுகிறது. இது முன்னைத் தாகிய புராண இயலைச் சொல்லுவதே புராணமாகும். அந்த இயலைச் சொல்லும் நம்நூலிற்கே உரியதாக இன்று வரை இருந்து வருகிறது. வேற்ருேர்கள் பிடகம் என்னும் பிடு அகமாகச் செய்ய இயல வில்லை. நாம் ஈண்டு கூறியனயாவும் ஞான தத்துவ நூற்களில் ஆர் இடங் கொண்டுள்ளன என்பதைத் தத்துவஞானிகள் உணர்வர்.

முருகப் பெருமான் திரு வருட் பேற்ருற் கிடைத்த அகத்தியத்தை நன்குணர்ந்து இந்நூற்கு நாம் உரைசெய்து வந்ததில் துராலிங்கவுரை, அவினயனுருரை, நற்றத்தவுரை, கழறம்பல் உரை, செயிற்றிய வுரை; அத்தங்கோட்டிய சார்வுரை, பணம் பாரவுரை, வையாமிகவுரை, காக்கப் பாடினியவுரை ஆகிய ஒன்பது வகை யுரையை மேற்பொண்டு விளக்கப் பெற்று இராமாயண இலக்கியப் பூர்வகாண்டம் நிறைவு பெற்று உத்தர காண்டம் தொடங்கப் பெறுகிறது.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46366

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவு குரு சிறுவயது முதல் இயம நியம நெறியில் நின்றதனால் திருவருள் கூட்டுவிக்க வாசிக்கலை பயின்று அக்கலையின் விளைவால் அமிர்த்தம் அருந்தி அதன் விளைவால் தன்னகத்தே தோன்றும் அகத்தீயை ஆராய்ந்து தெளிந்து அதன் மூலம் நூல்களை செய்துள்ளார்கள். அவர்கள் ஆக்கிய நூல்கள்

1. அகத்தியம்
2. உயிர்நிலைக் கலை இலக்கணம்
3. முத்திநெறி இலக்கணம்
4. கரண இலக்கணம்
5. பண்ணிலக்கணச் சூக்கம்
6. இலக்கிய இராமாயணம்
7. இரத்தினச் சுருக்க இராமாயணம்
8. திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்
9. திருமூலரின் சூனிய சம்பாதனை (உரை விளக்கம்)
10. திருமுறைப் பெருநூல் விளக்கம்
11. திருமகள் திருப்பதிகம்
12. கலைஞானம்
13. இலிங்கபுராணம்
14. ஞான சரஸ்வதி பதிகம்
15. வைத்திய சாஸ்திரம்
16. திருஞானசம்பந்தர் திரு அவதாரச் சிறப்பின் விளக்கம்.
17. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த இரண்டாம் திருமுறை பொருள்விளக்கம். பூர்வ மீமாம்சை. உத்தர மீமாம்சை.

கலியுகத்தில் கருணை கூர்ந்து நம் உயிருக்கு துணையான நூல்களை தந்திருக்கிறார்கள். நம் உயிர்த்தீயை இயக்கி ஒலி மூலம் ஒளியை உண்டாக்க அதன் மூலம் முத்தி அடைய ஆக்கிய நூல்கள். முதற்பொருளாகிய இறைவனுடைய கலையின் மூலம் ஆக்கியதால் இந்நூல்களுக்கு எல்லாம் அகவுரையாகவும் சாட்சியாகவும் அவனே இருப்பதால் கலியின் கொடுமை தீர ஒவ்வொரு நூலாக வெளி வந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் மிகவும் கருணை உள்ளம் கொண்டு முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் முத்தமிழ் வேதத் திருச்சபை நிறுவி பௌர்ணமி தோறும் திருமுறைப் பெருநூல் விளக்கமும் ஞாயிறு தோறும் இலக்கிய இராமாயணத்தையும் இயம்பி செவிக்கு பனிரெண்டு ஆண்டுகள் விருந்து படைத்தருளினார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் காட்டியருளிய நெறி வழியே 36 ஆவது ஆண்டு நிறைவை நோக்கி சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்கு சேரவாரும் செகத்தீரே என அன்போடு தெளிவு குருவின் ஆசியோடு அழைக்கின்றோம்.

Koviloor Digital Library

Sri Balaji Graphics, Coimbatore. 9361410269.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இந்நூலைப் பற்றி

நம் மூல முதல் குரு
ஆகமச் செம்மல் திருமூலர்

திருமந்திரத்தில்

ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழும் மளந்தான்
ஒருவனு மேயுல கேழுங் கடந்தான்
ஒருவனு மேயுட லோடுயிர் தானே

ஒருபொழு துன்ன ருடலோ டுயிரை
ஒருபொழு துன்ன ருயிருட் சிவனை
ஒருபொழு துன்னர் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னர் சந்திரப் பூவையே

என்று நமக்கு உணர்த்தி யருளுகின்றார்

உடல் உயிரது கூடி இயங்கும் நெறியை நமக்கு மிகவும் தெரிந்த இராமாயண இலக்கியத்துடன் ஒப்பிட்டு உரை விளக்கமும் தந்துள்ளார்கள். உடல் உயிரது கூடி வாசிக்கும் கலை தான் மெய்கலை என்றும், அந்த வாசிப்பில் நடக்கும் நிகழ்வுகள் தான் என்ன என்பதை நாம் அறிவதற்கு ஆக்கிய நூல் தான் இராமாயண இலக்கியம். இதில் உலக மக்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக தோற்றப்படலத்திற்கு மட்டும் உரை விளக்கம் தந்துள்ளார்கள். இந்நூலை வாசித்து வாசித்து தன்னை யறிந்து தன்னுள் நடக்கும் நிகழ்வுகளை அறிந்து நாத விந்து கலையின் மூலம் முடிவிலா மோன நிலையை அடைய ஆக்கிய நூல்.

இவண்
முத்தமிழ் வேதத் திருச்சபையார்
தேவகோட்டை